மாலைமணி

ஆசிரியர் : பி.எஸ். இளங்கோ

பொங்கல் மலர் விலை 30 காசு

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 10—1—60 | ஒலி 11

தூத்துக்குடி பொங்கலே!
நீ வாழி! நீ வாழி!

இத்திங்கள் 28-ம் நாள் நடைபெற இருக்கின்ற தூத்துக்குடி இடைத் தேர்தலில் மும்முனைப் போட்டி ஒழிந்துவிட்டது! நாம் காங்கிரஸ் கட்சியை நேரடியாகச் சந்தித்து போராட இருக்கிறோம்! இதைக் கண்டு நாங்கள் பெரு மகிழ்வும், பெருமையும் கொள்கிறோம்!

இந்த தித்திப்பான செய்தியை, இந்த தித்திப்பான நாளில், தித்திப்பான பால் பொங்கலோடு சேர்த்து உண்ணும் உங்களுக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கும் எல்லை இருக்காது! உங்கள் இல்லங்களில் பால் பொங்கி வழிவதைப்போல், உங்கள் உள்ளங்களில் இந்த செய்தி மகிழ்ச்சியாகப் பொங்கி வழியும்!

ஆண்டு ஆண்டு காலமாக இருந்து வந்த ஒரு சாபக் கேடு காரணமாக ஒரே ஒரு கட்சி ஊதாரித்தனமாக ஊழல்களைப் புரிந்து சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்தது! 'அந்த ஒரு கட்சிக்குத்தான் ஆள உரிமை இருக்கிறது, ஆள சக்தியும் இருக்கிறது' என்று ஊரெல்லாம், உலகெல்லாம் பறை சாற்றப்பட்டு வந்தது! காங்கிரஸ் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் ஆளும் சக்தி கிடையாது என்று தம்பட்டம் அடிக்கப்பட்டது!

எந்தக் காரணத்தால் அந்தக் கட்சி 'நானே ராஜா' என்று நடை போட்டு வந்ததோ அந்தக் காரணம் இப்போது ஒழிந்து விட்டது! எப்போதும் இது நிலைத்து நிற்கட்டும்! அதனால் நாடு வாழட்டும்! சர்வாதிகாரம் ஒழியட்டும்! சமதர்மம் தழைக்கட்டும்!

நாட்டைக் காடாக்கிய பிறகும், நாட்டுமக்களை மிருகங்களாக்கிய பிறகும் காங்கிரஸ் கட்சி நாட்டையாண்டு வருகிறது! அக்கிரமங்கள் பல நடந்தபின்பும், அநியாயங்கள் பல புரிந்தபின்பும் காங்கிரஸ் கட்சிதான் நாட்டை ஆண்டுவருகிறது! இதற்குக் காரணம் என்ன? நாட்டிலே வேறு கட்சிகளே இல்லையா! நாட்டிலே வேறு அரசியல் வாதிகளே கிடையாதா? எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன—இருந்தும் ஏன் இந்த நிலை?

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபடாத காரணத்தால் தான் காந்தி சீடர்கள் கும்மாளம் போட்டு வந்தார்கள்! கோலாட்டம் ஆடிவந்தார்கள்! அந்த நிலை இப்போது ஒழிந்துவிட்டது! தூத்துக்குடியைப் பொறுத்த வரையில் ஒழிந்துவிட்டது! இது எங்கும், எப்போதும் நிலைக்கவேண்டும்!

'மக்களை மாக்களாக்கி அவர்களை வாழவிடாமல் சாகடித்து வரும் சர்வாதிகார ஆட்சிக்கு முடிவுகட்ட நாட்டிலே உள்ள எதிர்க்கட்சிகளெல்லாம் ஒன்றுபட்டு விட்டன! இனி செல்லாது, உங்கள் ஆட்சி நில்லாது என்ற மகிழ்ச்சி எங்கும் மலரக் கண்டிருக்கிறோம்!

தூத்துக்குடி தேர்தலில் காங்கிரஸ் கட்சியை முறியடிப்பதற்காக, கம்யூனிஸ்ட்டு கட்சி தனது அபேட்சகரை வாபஸ் பெறச் செய்து தி. மு. கழகத்திற்கு ஆதரவளித்திருக்கிறது! இல்லை, இல்லை—திராவிடமுன்னேற்ற கழகத்தோடு சேர்ந்து காங்கிரஸ் கட்சியை வீட்டுக்கனுப்ப கம்யூனிஸ்டு கட்சி முன்வந்திருக்கிறது!

கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கை வேறு, நம்முடைய கட்சியின் கொள்கை வேறு! நேற்றும் வேறு, இன்றும் வேறு, நாளையும் வேறுதான்! இதில் துளியும் சந்தேகமில்லை! கம்யூனிஸ்டு கட்சி இன்றுபோல்தான் நாளையும், அதற்கு மறுநாளும் பொதுவுடமைப் பேசி வரும், உலக அரசியலில் கண்ணோட்டம் செலுத்திவரும்! அதேபோல் தான் நாமும் திராவிடத்தின் விடுதலைக்காக என்றும் பாடுபட்டு வருவோம்!

இரு கட்சிகளும் அரசியலில்தான் வெவ்வேறு பாதைகளில் செல்லலாமே தவிர, நாட்டு நலனில், மக்கள் நல்வாழ்வில் வெவ்வேறாகச் செல்ல முடியாது! இந்தக் காரணத்தால்தான் திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்டு கட்சியும் ஒன்றுபட்டிருக்கின்றன! இருகட்சிகளுடைய ஆசையும் காங்கிரஸ் கட்சி ஒழிந்து, நாட்டிலே நடைபெற்றுவரும் சர்வாதிகார ஆட்சி அழிந்து நல்லாட்சி மலரவேண்டுமென்பதுதான்!

காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதற்காக ஆரம்பிக்கப் பட்டிருக்கும் ஆச்சாரியாருடைய சுதந்திரா கட்சியும் நம்மோடு ஒத்துழைக்கும் என்று கூறப்படுகிறது! அதே போல்தான் பிரஜா சோஷலிஸ்டு கட்சியும் நமக்கு நல்லாதரவளிக்கும் என்று சொல்லப்படுகிறது!

நாட்டிலே உள்ள எதிர்க்கட்சிகளிடம் அரும்பியுள்ள இந்த ஒற்றுமையைக் கண்டு நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம்! அவர்களுக்கு எங்களுடைய நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

கம்யூனிஸ்டு தலைவர்களும், கம்யூனிஸ்டு தொண்டர்களும் வீடு வீடாகச் சென்று வோட்டர்களின் ஆதரவைத் திரட்டவேண்டும்!

ஆச்சாரியாருடைய கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் இப்பணியை புரிந்திட வேண்டும்!

பிரஜா சோஷலிஸ்டு கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் இப்பெரும் பணியை புரிந்திடவேண்டும்!

இருபத்தி எட்டாம் தேதி வரையில் எல்லா கட்சிகளும் அயராது, சலியாது உழைக்க வேண்டும்!

தூத்துக்குடி மக்களும் காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதற்கு கங்கணம் கட்டிக்கொண்டு இன்று முதல பணி புரியவேண்டும்!

தூத்துக்குடியில் காங்கிரஸ் கட்சியை வீழ்த்திவெற்றிக் கொடியை பறக்கவிட வேண்டும்!

நிச்சயமாக வெற்றிக் கொடியை வானளாவ பறக்க விடுவீர்கள்! அதில் துளியும் சந்தேகமில்லை!

தூத்துக்குடி வெற்றியால் ஆட்சியை கைப்பற்றிவிட முடியாது! ஆனால், வருங்கால ஆட்சிக்கு அது அச்சாரமாக அமையும்!

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு காங்கிரஸ் கட்சியை வீழ்த்த முன்வந்திருக்கும் எல்லா கட்சிகளுக்கும், எல்லா கட்சி தலைவர்களுக்கும்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்து வெற்றிபெற வைக்கப்போகும் தூத்துக்குடி தொகுதிவாக்காளர்களுக்கும் 'மாலைமணி' தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு பொங்கல் வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது!

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்ட செய்தியை அறிவித்த இந்தப் பொங்கல் நன்னாளை நாம் என்றும் மறக்கமுடியாது! 'தூத்துக்குடி பொங்கலே! நீ வாழி, நீ வாழி' என்று இந்தப் பொங்கல் பெருநாளுக்கும் எங்கள் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

வாழ்க ஒற்றுமை!

வீழ்க காங்கிரஸ்!

எங்கள்
பொங்கல் வாழ்த்து

தமிழர்களுக்கும், உழைப்பாளர்களுக்கும் உரிமைத் திருநாளாகத் திகழ்ந்திடும் இந்தப் பொங்கல் திருநாளில்—உழைப்புக்கு மதிப்பும், திராவிடர்களுக்கு உரிமையும் ஏற்பட்டு தென்னகம் செழிக்கவேண்டும் என்று விரும்பி அனைவருக்கும் எங்கள் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

மாலைமணி விற்பனையாளர்கட்கும், மாலைமணியின் அருமை வாசகர்களுக்கும் எங்கள் சார்பிலும்—எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் நண்பர்கள் சார்பிலும் பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்புள்ள,

பி. எஸ். இளங்கோ.

கொள்கை முழங்கும் மாலை மணி

'மாலைமணி', நமது இயக்கத்தின் கொள்கைகளை மக்களிடையே நல்ல முறையில் பரப்பிவரும் ஒரு சிறந்த இயக்கம்ஏடாகும்! அது பல இன்னல்களிடையேயும், எதிர்ப்புகளுக் கிடையேயும் இந்தப் பணியை அஞ்சாமல் செய்து வருகிறது!

நம்முடைய தோழர்கள், மக்கள் மத்தியில் பேசிடும் கருத்துக்களை சிறந்த முறையில் வெளியிட்டு வருகிறது! கதைகள் வரைந்தும், கட்டுரைகள் தீட்டியும், வேடிக்கைச் சித்திரங்கள் போட்டும் நமது இயக்கக் கருத்துகளை தெளிவாக எடுத்துச் சொல்லி, மக்களின் அன்பையும், ஆதரவையும் அது வெகுவாகப் பெற்றிருக்கிறது!

ஒரு இயக்கம் சொல்லி வரும் கருத்துக்களை-மக்கள் அறியச் செய்யும் பல சாதனங்களில் பத்திரிகைச் சாதனமும் ஒரு முக்கியமான சாதனமாகும்! இதை கருத்தில் கொண்டு—நமது மக்களும், நமது மாற்றார்களும் உணருமாறு-கொள்கையில் ஒரு சிறிதும் வழுவாது மாலை மணி தனது தொண்டைச் செய்து வருகிறது!

சமீபத்தில் நடந்த நகர மன்ற தேர்தலிலும், மற்றும் பல நிகழ்ச்சிகளிலும்-மாலை மணி தனது கருத்துக்களை தைரியமாக—கொள்கையை ஒரு சிறிதும் நழுவவிடாது எடுத்துச் சொல்லி பெரும் பணிபுரிந்து வந்திருக்கிறது!

எத்தகைய எதிர்ப்புகளுக்கும் பணியாது, தைரியமாக, ஆணித்தரமாக பதிலளித்து, நல்லதொரு விளக்கமும் தந்து — கொள்கை ஒன்றையே மூழுமூச்சாகக் கொண்டு பணியாற்றிவரும் மாலைமணி மக்கள் மன்றத்தில் சிறப்பானதொரு இடத்தையும் பெற்றிருககிறது!

சமீபத்தில் 'மாலை மணி' வெளியிட்டிருந்த சித்திரங்களை நண்பர்கள் என் பார்வைக்குக் கொண்டு வந்தார்கள்! அதை பார்த்த போது — மாலைமணி ஆசிரியருக்கு நம் கொள்கையிலிருக்கும் பிடிப்பையும், அவர் அதை மக்களுககு பரப்ப கொண்டுள்ள ஆர்வத்தையும் கண்டு வியந்தேன், மகிழ்ந்தேன்!

நானே கழகமோ சொல்லும் கருத்துக்களை நல்ல முறையில்—மக்கள் குழப்பமின்றி தெரிந்து கொள்ளும் வகையில், விளக்கமாக வலியுறுத்தி எடுத்துச் சொல்லுவதில் தலைசிறந்து விளங்குகிறது!

"மாலை மணி" யின் தொண்டை நமது மக்கள் வெகுவாகப் பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்பதே எனது ஆசையாகும்! எதிர் காலத்தில நாம் ஆற்ற வேண்டிய பணிகளுக்கு 'மாலை மணி' போன்ற பத்திரிகைகளின் தொண்டு மிகவும் தேவைப்படுகிறது! மக்கள் தங்கள் நல்லாதரவை நல்கி மாலைமணியின் பணிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க வேண்டுகிறேன்!

நாம் ஒரு சிறந்த இலட்சியத்தை மேற்கொண்டுள்ளோம்! அந்த இலட்சியத்தை ஈடேற்ற பல தியாகங்களையும் புரிந்திருக்கிறோம்! ஆனல் நாம் செய்துள்ள தியாகங்கள் குறைவு—செய்ய வேண்டிய தியாகங்கள் அதிகம்!

நாம், நாடு கேட்பதுமாற்ருன் நாட்டையோவேற்ருன்நாட்டையோ அல்ல! நம்முடைய நாட்டை—நாம் இழந்து விட்ட நாட்டைதான் கேட்கிறோம்! இழந்து விட்ட நாட்டைத் திரும்பக் கேட்பது எந்தவிதத்திலும் தவருகாது! "பிரிந்தால் வாழ்வார்களா" என்பதெல்லாம் கவைக்குதவாத பேச்சாகும்! இந்த கவைக்குதவாத விஷயங்களிலெல்லாம் நாம் கவனததை செலுத்தி காலத்தைவிரயமாக்க வேண்டிய அவசியமே இல்லை!

நாம் ஆண்ட இனம்—வீரத்தோடுவாழ்இந்தனம்! இன்று வலிவிழந்து பொலிவிழந்து, நல்வாழ்வு வாழ வகையற்று — கேவலம் அடிமைகளாக வாழ்ந்து வருகிறோம்! மீண்டும் நாம் இழந்த வளவை, அரசைப் பெற்று, சுதந்திர வீரர்களாக வாழ்வதற்கு இந்த பொங்கல் திருநாளில் சூளுரை செய்துகொள்ள வேண்டும்! இந்தப் பணியில் 'மாலை மணி' முன் நிற்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது! ஏனெனில் கொள்கை உரம் — பற்று —விடுதலை உணர்ச்சி இவைகளை தன்னகத்தே கொண்டுள்ள 'மாலை மணி' அதனின்று ஒரு சிறிதும் நழுவாது என்பதால் இதனை தைரியமாக எடுத்துச் சொல்கிறேன்!

சமீபத்தில் நான் ஒரு கூட்டத்தில் பேசும்போது — 'நாம் அடுத்து வரும் தேர்தலில் வெற்றிபெற உண்டி வைத்து பணம் சேர்க்க வேண்டும்' என்று கூறினேன்! அதை விடாது — வலியுறுத்தி, வலியுறுத்தி மக்களை அந்தப் பணியில் ஈடுபாடு கொள்ளுமாறு தூண்டி வருகிறது என்பதை அறியும்போது எனக்கு பெரு மகிழ்வு ஏற்படுகிறது!

தென்னகத்தின் விடுதலைக்கு — இழந்த நாட்டை பெறுவதற்கு 'மாலை மணி தன்னையே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது! அதனுடைய தொண்டை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்!

வாழ்க மாலை மணி!

வளர்க அதன் தொண்டு!!

விடுதலை உணர்ச்சி பொங்கட்டும்!

நாவலர் நெடுஞ்செழியன்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளில் இருந்து ஒரு சிறிதும் வழுவாது — நாட்டின் நலிவைப் போக்க, நாட்டின் இழிவைப் போக்க—சிலருடைய இழிகுணத்தையும் போக்க பாடுபட்டுவந்த நமக்கு எதிர்காலமும் மிகப் பயங்கரமாகவே இருக்கும்!

நாம் எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை சமாளிக்க வேண்டி இருக்கலாம்! அந்த நேரத்திலும் நாம், கடமை, கண்ணியம் கட்டுப்பாடு இவைகளை மறந்துவிடக் கூடாது!

நம்முடைய வளர்ச்சியையும் வலிவையும் கண்டு மாற்ருர்களெல்லாம் மனம் புழுங்கி புழுங்கி வேதனைப் படுகிருர்கள்! நம்முடைய பொலிவைக் கண்டு, நம்முடைய வலிவைக் கண்டு நம்முடைய செழிப்பைக் கண்டு எதிரிகளெல்லாம்பொருமைப்படுகிருர்கள், பொச்செரிப்புக் கொள்கிருர்கள்! எனவே நம்மை வீழ்த்தவும், நம்மை ஒழித்துக் கட்டவும், நம்மீது பழிகளை சுமத்தவும், இல்லாதது பொல்லாதது களைச் சொல்லி நம்முடைய கொள்கைக்கு மாசு கற்பிக்கவும் முனைந்து நிற்கிருர்கள்! எனவே நம்மை இழித்துப் பேசுகிருர்கள்! பழித்துப் பேசுகிருர்கள்; யார் யாரோ நம்மைத் திட்டினர்கள், தூற்றினர்கள்! அதிலே நாம் அழியவில்லை என்ருல் இவர்களுடைய பழி சொற்களாலா நாம் அழிந்துவிடுவோம்!

அவர்கள் தூற்றத் தூற்றத் தான் நாம் வளர்ந்திருக்கிருேம். அவர்கள் திட்டத் திட்டதான் நாம் பொலிவோடு வளர்ந்திருக்கிருேம். யாரும் நம்மை ஆட்ட, அசைக்க முடியாதபடி வளர்ந்திருக்கிருேம்!

அவர்கள் நம்மைத் தூற்றித் திரிகிருர்கள் என்பதற்காக நாமும் அவர்களைத் தூற்றவேண்டும் என்று எண்ணக்கூடாது. அந்த இழிகுணம் அவர்களோடே இருக்கட்டும்! நமக்கு அது வேண்டவே வேண்டாம்!

அவர்கள் தூற்றுவதற்காகவே இருக்கிருர்கள், தூற்றுவதற்காக கட்சியை வைத்துக் கொண்டிருக்கிருர்கள்! நாம் தூற்றுவதற்காக கட்சியை வளர்க்கவில்லை! நம்முடைய நோக்கம் வேறு, அவர்களுடைய இலட்சியம், கொள்கை கோட்பாடுகளே வேறு!

நாம் நம்முடைய பணிகளை தொடர்ந்து செய்துக் கொண்டே போகவேண்டுமே தவிர, அவர்களைப் பற்றி நாம் ஒரு துளியும் கவலைப்படக்கூடாது!

வடவர்கள், தென்னகத்து மக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளை எடுத்துக்கூறி அவர்களால் நாம் அடைந்துள்ள கேடுகளை எடுத்துக் காட்டி — நாட்டின் தாழ்நிலையை மக்களுக்கு உணர்த்த வேண்டும்!

நம்மிடத்திலிருக்கும் கொள்கை மாசு இல்லாதது, மருவில்லாதது, பழுதில்லாதது! நம்மிடத்திலிருக்கும் கொள்கைகள் இந்த நாட்டை வாழவைக்கும் கொள்கைகளாகும்! எனவே தான் நம்முடைய கொள்கைகள் எங்கும் பரவி இருக்கின்றன! புகமுடியாத இடங்களிலெல்லாம் புகுந்திருக்கின்றன! நுழைய முடியாத இடங்களிலெல்லாம் நுழைந்திருக்கின்றன! எனவே நாம் யாரைக்கண்டும் பயப்படத் தேவை இல்லை.

நம்மிடத்தில் ஆற்றல்படை இருக்கிறது, அறிவுப் படை இருக்கிறது, இளைஞர் படை இருககிறது. நாம் எதற்கு அஞ்சவேண்டும்?

நாம் இனி செய்ய வேண்டியதெல்லாம் ஆக்கப் பணிகளே தவிர அவர்களைப் போல் அழிவு வேலைகளை அல்ல! இதை நம்முடைய கழகத்தோழர்கள் நன்ருக உணரவேண்டும்!

அண்மையில் தூத்துக்குடியில் இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது! அந்தத் தேர்தலில் நம்முடை கழகம் நேரடியாகப் போட்டியிடுகிறது! காங்கிரஸ் கட்சிக்கு எதிராக உள்ள கட்சிகளெல்லாம் நல்லாதரவைத் தர சம்மதித்திருக்கின்றன! காங்கிரஸ் கட்சிகளின் சர்வாதிகாரப் போக்கை வீழ்த்த மக்கள் பெரும் பணிகளை செய்யவேண்டும்!

காங்கிரஸ் கட்சி, சென்ற தேர்தலைவிட இந்தத் தேர்தலில் நம்மை முழு மூச்சுடன் எதிர்த்து நிற்கும்! தனக்கிருக்கும் ஆள் பலம், அதிகார பலம், பணபலம் அத்தனையையும் உபயோகிக்கும்! எனவே நாம் எச்சரிக்கையோடு பணிபுரிந்து நமது வளர்ச்சியைக் காட்ட வேண்டும்!

நாம் மேற்கொண்டுள்ள இலட்சியத்திற்காக நாம் அரும்பணிகளை செய்திட வேண்டும். நாம் ஏந்தி நிற்கும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளிலிருந்து அகலாமல் விடுதலை பணியை செய்திடவேண்டும்! இதுவே எனது பொங்கல் செய்தியுமாகும்.

தென்னகத்தின் விடுதலைக்காக சிறந்தமுறையில் பாடுபட்டு வரும் "மாலைமணி" ஏட்டின் மூலம் உங்களுக்கெல்லாம் என்னுடைய பொங்கல் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்!

இந்தப் பொங்கல் திருநாளில் பொலிவோடும், வலிவோடும், ஊக்கத்தோடும், உணர்ச்சியோடும் பாடுபட உறுதி கொள்ளுங்கள்! உங்கள் இல்லங்களிலே பால் பொங்குவதைப் போல— உங்கள் உள்ளத்திலே விடுதலை உணர்ச்சியும் பொங்கட்டும்!

காங்கிரசை காமராஜரே அழிக்கலாம்!

நமது முதலமைச்சர் காமராஜர் தனது "மூச்சுள்ள வரையில் காங்கிரஸ் கட்சியை அழிய விடமாட்டேன்" என்று ஒரு கூட்டத்தில் பேசி இருக்கிருராம்!

காங்கிரஸ்கட்சி நாட்டுக்கு செய்து வரும் தீங்கையும், மக்களுக்கு செய்து வரும் துரோகத்தையும் எல்லோரும் உணர ஆரம்பித்து விட்டார்கள்! காங்கிரஸ்கட்சி அழிந்தால் தான் நாடும் நாட்டு மக்களும் வாழ்வார்கள் என்ற எண்ணம் எல்லோரிடத்திலும் அரும்ப ஆரம்பித்து விட்டது!

காமராஜர் கண் முன்னுலேயே, காமராஜரின் எதிரிலேயே காங்கிரஸ்கட்சி செத்து மடியப் போகிறது!

காலம் போகிற போககையும், உலகத்தில் நடைபெறுகின்ற அதிசயங்களையும் பார்க்கும் போது காமராஜரின் கைகளாலேயே காங்கிரஸ் கட்சி கொல்லப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!

உண்டி வைத்தீர்களா? ஊராள்வோரை விரட்ட முடிவு செய்வீர்களா?

எப்போது வைத்தீர்கள்? எவ்வளவு சேர்த்தீர்கள்?

இன்று பொங்கல் விழா! பூரித்த முகத்தோடு, மகிழ்ச்சி பொங்கி வழியும் உள்ளத்தோடு புன்னகைத்தவழ விழாக் கொண்டாடி களித்திடும் தமிழ்த் திருநாள்! தன்மானத் தோழர்களின் தனிப் பெரும் திருநாள்!

பகலெல்லாம் பாடுபட்டு, பாடுபட்டு இரத்த வியர்வை சிந்திய பாட்டாளி, பலனைக் கண்டு மகிழ வேண்டிய மாணிக்கத் திருநாள்!

புத்தாடை பூண்டு, புதுப் பால் பொங்கலை உண்டு, புது இன்பம் பெற வேண்டிய பொன்னுள்!

ஆமாம், தமிழனுக்கு இது தான் பொன்னுள்! பெருநாள்! இந்நாளுக்கு ஈடு இணை எந்நாளும் இல்லை!

எல்லா இல்லங்களிலும் பால் பொங்குகிறது! எல்லோரும் புத்தாடையும் உடுத்தி இருக்கின்றனர்! இதைக் கண்டு நாம் பூரிப்பும், பெருமையும் கொள்ளுகிறோம்! ஆனால், இந்த மகிழ்ச்சி என்றும் தங்குமா?

இன்று பால் பொங்குகின்ற இல்லங்களிலெல்லாம் நாளையும் பொங்குமா? இன்று மகிழ்ச்சி பொங்குகின்ற உள்ளங்களில் நாளையும் பொங்கி வழியுமா?

இன்றுகூட எல்லா இல்லங்களிலும் பால் பொங்குமா? மகிழ்ச்சி தவழ்ந்து விளையாடுமா?

அடுப்பில்லாத வீடுகள், அடுப்பிருந்தும் விறகு இல்லாத வீடுகள். விறகிருந்தும் அரிசி இல்லாத வீடுகள்—நாட்டிலே அரிசி இருந்தும் அதைப் பெற சக்தி இல்லாத வீடுகள் இலட்சக் கணக்கிலிருக்கும்போது-இன்றுகூட எங்கிருந்து பால் பொங்கும்! ஏன்! வீடே இல்லாது நடுத் தெருவில் வாழும் மக்கள் இலட்சக் கணக்கில் வாழும் போது எங்கிருந்து பால் பொங்கும்?

நாட்டிலே நிலமிருக்கிறது—நிலத்திலே வளமிருக்கிறது—உழைக்கவும் மக்கள் இருக்கிறார்கள்! என்றாலும் அரிசி இல்லை! காரணமென்ன? உழவுத் தொழிலிலே ஊதியமில்லை — அதனால் அவர்களுக்கு உற்சாகமும் இல்லை! இதற்கு யார் பொறுப்பாளி?

உச்ச வரம்பு என்ற பேச்சு அடிபடுகிறது— உண்மைதான்! எப்போது உச்ச வரம்பு? குதிரை களவு போனபின்பு லாயத்தை பூட்டப் போகிறீர்களா?

உச்சவரம்பு — உச்சி குளிரும் வார்த்தைதான்! ஆனால் எங்கே உச்ச வரம்பு, யாருக்கு உச்ச வரம்பு, எப்படி உச்ச வரம்பு செய்யப் போகிறீர்கள்? இது வரை விளக்கம் தரக்காணோமே! உச்ச வரம்பு போக மிச்சமுள்ளதை என்ன செய்யப்போகிறீர்கள்? எல்லோருக்கும் பிரித்துத் தருவதென்றால் சொச்சத்திற்கு என்ன செய்வீர்கள்? இதற்கு குழப்பமில்லாத திட்டம் ஏதேனும் உண்டா? இதுவரை சரியான திட்டமில்லை என்றால் என்ன அர்த்தம்! உச்சவரம்பு என்ற சொல்லுக்கு ஓட்டுச் சீட்டு வாங்குதல் என்று அர்த்தமா? உச்ச வரம்பு என்றால் வோட்டு போடு என்று பொருளோ?! உச்ச வரம்பு என்ற வார்த்தை நிச்சயமாக 1962 வரையில் இருக்குமா? அதற்கு மேலும் நீடிக்குமா?

பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குமேல் உங்களுடைய மாய ஜால வித்தையை மக்கள் பார்த்து விட்டார்கள்! இனி மாங்கொட்டை வித்தை பலிக்காது!

வடபாதி மங்கலம் கரும்புத் தோட்டம் போட்ட பின்பு—

குன்னியூர் குடும்பம் தனித் தனி வாசற்படி வைத்துக் கொண்ட பின்பு—

பூண்டி தங்களுக்குள்ளேயே பூதானம் செய்து கொண்ட பின்பு—

உக்கடை உடைந்து போன பின்பு—

நீங்கள் உச்ச வரம்பு கட்டப் போகும் வித்தையை உணர்ந்து கொண்டார்கள்!

உச்சவரம்பால் உத்தண்டிக்கு லாபமில்லை, உக்கடைக்குத்தான் லாபம்! குப்பனுக்குப் பயனில்லை குன்னியூருக்குத்தான் கொழுத்த வேட்டை!

பொங்கல் விழா கொண்டாடி விட்டு களித்திருக்கும் நண்பர்களே! உச்ச வரம்பு என்னும் மயக்கும் வார்த்தையை வைத்துக் கொண்டு அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கும் ஊராளத் திட்டம் போடுகிறார்கள்! "ஏழைக்கு நிலம், ஏழைக்கு நிலம்" என்று கூறி அவர்கள் மீண்டும் உங்களை ஏணியாக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள்! ஏறிய பின்பு ஏணியை எட்டி உதைக்கத் தயங்கமாட்டார்கள்! ஏமாந்து விடாதீர்கள்!

ஏழைக்காக கண்ணீர் வடிப்பவர்கள் என்றால் அரிசி விலை ஏறுமா?

ஏழைக்காக வாழ்பவர்கள் என்றால் உப்பு விலை ஏறுமா? புளி விலை ஏறுமா? மிளகாய் விலை ஏறுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! "உச்ச வரம்பு கட்டினால் உங்களுக்கு வோட்டு போட மாட்டோம்" என்று சொல்லிப் பாருங்கள்! பிறகு நிச்சயமாக உச்ச வரம்பு என்ற உச்சரிப்பே அவர்களுடைய நா உச்சரிக்காது! அவர்களுக்கு வேண்டியது உச்சவரம்பல்ல — ஓட்டுதான் — மந்திரி பதவிதான்!

(19-ம் பக்கம் பார்க்க)

பலமான காற்றடித்தாலும் புளியமரம் விழாது-ஒதிய மரம் தான் விழும்!

காங்கிரஸ் - ஒதிய மரம்; நமது கழகம் புளியமரம் !

அறிஞர் அண்ணா பேருரை

சென்னை ஒட்டேரி அண்ணா நூலகத்தின் மூன்றாவது ஆண்டு விழா தோழர் கே. பாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் கோ, சீனிவாசன், தி. வெங்கடேசன், ந.சு. மணி, கோ. லோகநாதன், க. வரதன் முன்னாள் மேயர் அ. பொ. அரசு ஆகியோர் பேசினர்.



இறுதியாக அறிஞர் அண்ணா அவர்கள் பேசியதாவது—

அன்புள்ள தலைவரவர்களே! அருமை தோழர்களே! இந்த வட்டாரத்திலே நடக்கின்ற இந்தக் கூட்டத்தில் நம்கழகத்திற்கு நிர்வாகத் திறமை இருக்கிறது என்பதை நகராட்சி மன்றத்தலைவராக இருந்த போது எடுத்துக் காட்டிய நண்பர் அரசு கலந்து கொண்டது பெருமை அளிப்பதாகும்.

நம் கழகம் நீண்ட நாட்களாகவே ஆட்சியாளரின் ஆட்சியிலே நடைபெறுகின்ற ஊழல்களை எடுத்துகூறி வருகின்ற கட்டம் மாறி, நிர்வாகப் பொறுப்பு கிடைக்குமானால், நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டுவோம்என்றோம்வாய்ப்பு நமக்கு கிடைத்ததுகடந்த மேயர் தேர்தல் மூலம்!

கடந்த தேர்தலின்போதுமாற்றுக் கட்சிக்காரர்கள் கேட்டார்கள்—

அவர்களிடத்திலே கிளர்ச்சி செய்ய ஆட்கள் இருக்கிறார்கள்! தடியடி படுவதற்கு தயாராக ஆட்கள் இருக்கிறார்கள். சிறைச்சாலைக்கு செல்ல ஆட்கள் இருக்கிறார்கள்! வாழ்க என்ற முழக்கத்திற்கு ஆட்கள் இருக்கிறார்கள், ஆனால் நிர்வாகம் செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்களா என்று!

அதற்கு எடுத்துக் காட்டாக நண்பர் அரசு சில மாதங்கள் மேயராக இருந்தாலும் அதிகாரிகள் மதிக்கத்தக்க விதத்திலும் மக்கள் போற்றிப் புகழ்கின்ற விதத்திலும்திறம்படபணியாற்றி இருக்கிறார்கள். அவருக்கு கழகத்தின் சார்பிலே நன்றியறிதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த முறை நண்பர் அப்துல் காதர் மேயர் பொறுப்பேற்று திறமையுடன் நல்ல முறையுல் பணியாற்றி வருகிறார்.

நிர்வாகத் திறமை பெற்றவர்கள் நமக்கு அதிகமாகத்தேவை. அவர்கள் நல்ல பெயர் எடுக்கிறார்கள் என்றால் அந்த புகழ் நமது கழகத்திற்கே தவிர அவர்களுக்கு அல்ல!

சந்தனம் அரைப்பது மார்புக்கே தவிர இடத்துக்கு அல்ல! கட்டையைப் போன்ற அவர்களை பயன்படுத்திக்கொண்டால் சந்தனம் கிடைக்கிறது. அவர்களது செயல் நமதுகழகத்திற்கு வாசனை தருகிறது! அதைப் போல் அரசுவை பாராட்டுவதும் மேயர் அப்துல் காதரை பாராட்டுவதும் நமது கழகத்திற்கு பெருமையாகும்!

நான் இந்த கூட்டத்திற்கு வந்து கொண்டிருந்த நேரத்தில் நண்பர் அரசு வழக்கத்திற்கு மாறாக முழக்கமிட்டுக் கொண்டிருந்ததைக் கேட்டேன்.

மேயரா்க இருந்தபோதுகேட்காத இந்த முழக்கத்தை. அப்போது பேசியதை விடமிகவேகமாக பேசியதை கேட்ட நேரத்தில் பேசுவது அரசுதானா என்ற ஐயப்பாடு எனக்கு எழுந்தது கிட்டே வந்தபோது தான்தெரிந்தது!

நண்பர் அரசு பேசுகையில் மாற்றுக் கட்சிக்காரர்கள் தாறுமாறாக பேசுவதாகவும் யார் யாரோ திட்டுகிறார்களென்றும் கூறினார்.

இது ஒன்றும் ஆச்சர்யப்படக் கூடியதல்ல! நம்மைத் திட்டுவதற்கென்றே ஆண்டுக்கொரு முறை வருவார்கள். திட்டி தீர்த்தான பிறகு இந்த ஆள் வேண்டாம், வேறு ஆள் கொண்டு வாருங்கள் என்பார்கள், அப்படி வந்தவர்கள் தான்சந்தனபொட்டுகளும். விபூதி பட்டைகளும், மணி மாலைகளும்!

இப்படிப்பட்டவர்களின் தாக்குதல்களால் கழகத்தின் செல்வாக்கை குறைக்க முடியாது. ஏன்?

நம் கழகம் கொள்கையின் அடிப்படையிலே கட்டப்பட்டதாகும்! நல்ல அடிப்படையிலே எழுப்பப்பட்ட கட்டடம் நிலை குலையாது!

பலமான காற்றடித்தாலும் புளிய மரம் விழாது! ஒதிய மரம்தான்விழுந்துவிடும். அதைப் போல் நமது கழகம் நல்ல அடிப்படையிலே கட்டப்பட்டது. எப்படி நிலை குலைந்துவிடும்?

எங்களுடைய சாமர்த்தியத்தாலே தான் கழகம் செல்வாக்கு பெற்றிருக்கிறது என்று நினைத்துக் கொண்டு, மாற்றுக் கட்சிக்காரர்கள் எங்களைத் திட்டுகிறார்கள்.

நம்முடைய வீட்டு வாயிற்படி தலையில் இடித்தால் நாம் என்ன செய்கிறோம். 'பாழாய் போன வாயிற்படி இடித்து விட்டதே' என்று சொல்லுகிறோம். இரண்டாவதுமுறை வரும்போது ஜாக்கிரதையாக வருகிறோம். அதற்காக கடப்பாரையை எடுத்து வந்து வாயிற்படியை இடித்து தள்ளி விடுவதில்லை!

கழகம் வளர்ந்து சட்ட சபையிலே பதினைந்து உறுப்பினர்களையும், பாராளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர்களையும், கார்ப்பரேஷனில் இரண்டாவது மேயரையும், கோவையிலே துணைத் தலைவராகவும், பல பஞ்சாயத்துக்களிலும், ஊராட்சி மன்றங்களில் நம்மவர்கள் பெரும்பாலோர் இருக்கிறார்களென்றால் எரிச்சல் வராதா?

இருநூறு ரூபாய் கொடுத்து வாங்கிய பசு, சொட்டக் கறந்தாலும் முக்கால் படி பால் தான் கிடைக்கிறது. அறுபது ரூபாய் கொடுத்து வாங்கிய பசு ஒன்னரை படி பால் கறக்கிறது என்றால், தன் பசுவை அடிக்க மாட்டார், அடுத்த வீட்டுக்காரன் மாட்டைத் தான் அடிப்பான்!

'இரு நூறு ரூபாய் கொடுத்து வாங்கிய இந்தப் பசு, கோயில் ரிஷிபம் போல் இருக்கிறது முக்கால் படிபால்தானே கறக்கிறதுஎன்றுஅடுத்த வீட்டுக்காரன் மாட்டை அடிப்பது போல் நமது கழகம் அறுபது ரூபாய் கொடுத்து வாங்கி, ஒன்னரைபடி பால் தருகின்ற பசுவைப் போன்றது.

காங்கிரஸ், இருநூறு ரூபாய்க்கு வாங்கி, முக்கால் படி தருகின்ற பசுவைப் போன்றது. அதுவும் கஷ்டப்பட்டு, காமராஜர் கிட்டே, உட்கார்ந்து சொட்டு கூட விடாமல் கறந்தால் தான் முக்கால் படி கிடைக்கிறது!

நமது கழகம் அறுபது ரூபாய் கொடுத்து வாங்கிய பசுவைப் போன்றது. நாம் பத்து வருடத்தில் பெற்ற செல்வாக்கை எந்தக் கட்சியும் பெறவில்லை, என்றால் யாருக்குத் தான் கோபம் வராது?

பல தோழர்கள், ஆட்டோ ரிக்ஷா இழுப்பவர்களையும், சைக்கிள் ரிக்ஷா இழப்பவர்களையும் பார்க்கிறீர்கள். ரிக்ஷா இழுப்பவன் சரிகை வேட்டி கட்டிக் கொண்டும், சரிகைத் துண்டு போட்டுக் கொண்டு ரிக்ஷா இழுத்தால், அதில் உட்கார்ந்திருப்பவனுக்கு சரிகை வேட்டி இல்லையே என்ற காரணத்துக்காக, வேகமாக இழுத்தால் கூட இன்னும் வேகமாக போ, என்று கூறுவான்!

சரிகை வேட்டி கட்டிக் கொண்டு வேகமாக வண்டியை இழுத்துச் செல்பவனைப் போல் நம் கழகம் வேகமாக வளர்ந்து வருகிறது! நமது வளர்ச்சியைக் கண்டு பொறாமைப் படுகிறார்கள் அது ஒரு கட்சியா, அதற்கு வளர்ச்சி இருக்கிறதா என்று பேசுகிறார்கள்!

நீங்கள், மேயரை இரண்டு முறை கொடுத்தீர்கள் நாற்பத்தைந்து நகராட்சி மன்ற உறுப்பினர்களை தந்தீர்கள்! பாராளு மன்ற உறுப்பினர்கள் இரண்டு பேரையும், பதினைந்து சட்ட மன்ற உறுப்பினர்களையும் கொடுத்திருக்கிறீர்கள்! ஏன் கோபம் வராது?

உங்கள் மீது காட்ட வேண்டிய கோபத்தை எங்கள் மீது காட்டி, திட்டுகிறார்கள்!

அவர்கள் திட்டத் திட்ட தான் நாம் வெற்றி மேல்வெற்றி பெறுகிறோம்! அவர்கள் தாக்கிப் பேசுகிறார்கள் என்பதற்காக நம் தோழர்கள் துளியும் வருத்தப்படக் கூடாது?

திட்டுவதற்குப் பதிலாக காமராஜர் மேடையிலே திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல கட்சி என்று பிரச்சாரம் செய்தால், என்ன பொருள்? நம் கட்சி பிரயோஜனமில்லை என்று தானே பொருள்!

கூட்டம் போட்டு உள்ள எரிச்சலை அடக்கிக் கொள்வதற்காக நாலு வார்த்தை தாக்கிப் பேசுவதால் நமக்கு எந்த அளவிலும் நமது செல்வாக்கு குறையாது!

நண்பர் அரசு மேயரானதும் தமிழக மெங்கும் வாழ்த்தினார்கள், பாராட்டி மகிழ்ந்தார்கள்! ஆனால் செங்கல்பட்டு மாவட்டத்திலே இருக்கும் காங்கிரஸ்காரர்கள். எரிச்சல்கொண்டுஏதேதோ பேசினார்கள் எங்களூர் இளைஞர் காங்கிரசில் உள்ள வாலிபர்கள் 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடித்துக் கொள்வது போல் தி.மு.க, மேயர் ஊர் ஊராகப் போகிறார்' என்று போஸ்டர் போட்டு, தெரு வெங்கும். ஒட்டினார்கள், அதைப் பார்த்துப் பார்த்து நான்கு நாட்கள் திருப்தி அடைந்தார்கள்.

அந்த சுவரொட்டிக்கு பதிலாக 'காஷ்மீர் நாட்டு பார்ப்பானர் நேரு வந்தால் காலடியில் வீழ்வதேன்' என்றுபோஸ்டர்போட்டு அவர்கள் ஒட்டிய சுவரொட்டிக்குப் பக்கத்திலே ஒட்டிய பிறகு அவர்கள் ஒன்றும் மறுத்துப் பேசவில்லை! ஏன்? நாம் திட்டுவதானல் அவர்கள் தாங்க மாட்டார்கள்!

காரணமென்ன? நண்பர் அரசுவும், மற்ற உறுப்பினர்களும், நகராட்சி மன்றத்திற்கு சென்றதேன், சாக்கடை நாற்றத்தை குறைப்பதற்காகத்தான்!

நாமும் திட்டினால் நாற்றமெடுக்கும் புதிய சாககடை உண்டாகும் பொது வாழ்க்கையிலே!

(16-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மொழி, பிறப்பு தத்துவத்திலே ஆரம்பமாகிறது !

வடமொழி, இறப்பு தத்துவத்திலே ஆரம்பமாகிறது !

கவிஞர் கண்ணதாசன் பேச்சு

சென்னை 68-வது வட்டம் புதுப்பேட்டையில் கடந்த 28-12-59 அன்று மேயர், துணை மேயர் பாராட்டு விழா திரு. எம். எஸ். எஸ். அப்துல்கபீர் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் திரு. டி. கே. சீனிவாசன், நகராட்சி மன்ற உறுப்பினர் சி. சிட்டிபாபு, நெல்லை புகாரி, கும்பகோணம் சலாம் ஆகியோர் பேசினர்!

இறுதியாக கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பேசியதாவது.

அன்புகெழுமிய தலைவரவர்களே! நண்பர்களே!

இந்த பாராட்டு கூட்டத்திலே கலந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்த நண்பர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்!

எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் தெளிவான கருத்துக்களை சொன்னார்கள்! நண்பர் டி, கே. சீனிவாசன், சிட்டிபாபுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுப் பிரிவினைக் கருத்துக்களை எடுத்துச் சொல்லி வாழ்கிறது—வளர்கிறது!

சில கட்சிகள் ஏன் பிறந்தோம், ஏன் வாழ்கின்றோம் என்று தெரிந்து கொள்ளாமலேயே வாழ்கின்றன! திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொள்கை முத்திரையாக வீழ்ந்திருக்கிற காரணத்தாலே திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வருகிறது!

நாட்டிலே சில கட்சிகள், நமது கொள்கை தெரியாதது போல நடிக்கின்றன! நமது அடிப்படை கருத்து பலசொல்லியிருக்கிறோம்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி முக்கியமானக் கட்டத்தில் இருக்கிறது!

பெரியாரிடத்திலே இருந்து நாம், திராவிட முன்னேற்றக் கழகமாக பிரிந்த போது அறிஞர் அண்ணா 600 கிளைக் கழகங்கள் ஆரம்பத்தில் இல்லையென்றாலும், ஓரிரு ஆண்டுகளில் 500 கிளைக் கழகங்களும், அடுத்த ஆண்டு ஆயிரம், இரண்டாயிரம் கிளைக் கழகங்கள் தோன்றின! இன்று மூவாயிரம், ஐயாயிரம் கிளைக் கழகங்கள் நமக்கு இருக்கின்றன! நமக்கிருப்பது போல காங்கிரசுக்கு மூவாயிரம் கிளைக் கழகங்கள் இல்லை! இன்று நம்மிடத்திலே இரண்டு லட்சம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள்!

நம்மிடத்தில் கலைஞர்கள் இருக்கிறார்கள்! தொண்டர்கள் இருக்கிறார்கள்! தொழிலாளர்கள் இருக்கிறார்கள்!

தேர்தல் காலத்தில் பணத்தை வைத்துக் கொண்டு ஆள் பிடிக்கிறது காங்கிரஸ்!

நம் கையில் பணமில்லா விட்டாலும் கடமையோடு கழகத்தின் வளர்ச்சியைக் கட்டிக் காத்து வருகிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் நாடெங்கும் வளர்ந்து வருகிறது 'என்பது கண் கூடாகத் தெரிகிறது! தமிழ் நாட்டை சுற்றி வருகிற போது காங்கிரஸ் காரர்களுக்கும், காங்கிரஸ் மந்திரிகளுக்கும் நன்றாகத் தெரிகிறது தெரிந்தும் நமக்கு தமிழ் நாட்டில் வளர்ச்சியில்லை என்று கூறி வருகிறார்கள்!

நூற்றுக்கு நாற்பது பஞ்சாயத்துக்களிலும், எல்லா முனிசிபாலிடிகளிலும், மாநகராட்சி மன்றத்திலும் நாம் இடம் பெற்றிருக்கிறோம்! சென்னைக்கு மேயராக நமது நண்பர் அப்துல்காதர் இருக்கிறார்.

நாம் வளர்வோம் என்ற நம்பிக்கை முதலில் இல்லை! வளர்வோம் என்று நம்பவில்லை-- வளர்கின்ற பின்னும் நம்பமறுக்கிறார்கள்!

நண்பர் புகாரி பேசிய போது, 'மருத்துவ மாநாட்டில் காமராசர் பேசும் போது திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசினார்' என்று.

காமராசர் எங்கே போனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசி வருகின்ற செய்தி அறிந்ததே!

நாள் தோறும் நமது கூட்டம் நடைபெறுகிறது. இன்று அரும்பாக்கத்திலும், வில்லிவாக்கத்திலும், புதுப்பேட்டையிலும் இன்னும் பல இடங்களில் நமது கூட்டம் நடைபெறுகிறது. எந்தப் பகுதியில் கூட்டம் கூட்டினாலும் லட்சக் கணக்கில் மக்கள் கூடுகிறார்கள்!

தினமணி பத்திரிகை செய்தியை நினைத்துக் கொண்டு நமக்கு வளர்ச்சி இல்லை என்று காங்கிரஸ்காரர்கள் கருதிக் கொண்டிருககிறார்கள்.

கருநாடகத்தில் வங்காள இலக்கிய மன்றத்தில் பேசு

(14-ம் பக்கம் பார்க்க)

வடநாட்டுக் கவர்னருக்குப் பதில் வருங்கால திராவிடராட்சித் தலைவர் பவனி வந்தார்!

'பார்க்பேர்' கண் காட்சியில்

அண்ணா பவனி வந்த கண் கொள்ளாக் காட்சி!

சென்ற 30-12-59-ம் தேதி சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. (தென்னிந்திய விளையாட்டு மைதானம்) திடல் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. என்றும் காணாத மக்கள் திரண்டு கூடியிருந்தார்கள்.

மேற்படி கழகத்தார், சென்ற 50 ஆண்டுகளாக கண்காட்சி நடத்திவந்தாலும், அன்று இருந்ததைப் போன்று என்றும் மக்கள் கூட்டம் இருந்ததில்லை. காரணம், திராவிட மக்களின் ஒப்பற்றத்தலைவர், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த தென்னகத்தின் தனிப் பெருந் தலைவர்—நாட்டு மக்களின் நலத்திற்காக சலியாது உழைத்து போர் முரசு கொட்டிவரும் விடுதலை வீரர் அறிஞர் அண்ணா அவர்கள் அங்கு வருகிறார், மைதானத்தைச் சுற்றி பவனி வருகிறார் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் அந்த மாபெரும் தலைவரைக் காண அந்த மக்கள் வெள்ளம் அங்கு திரண்டிருந்தது அந்தக் காட்சி உண்மையிலேயே கண் கொள்ளாக் காட்சியாகத்தான் இருந்தது!



அண்ணா அவர்கள் நான்கு மணிக்கு அங்கு வருகிறார் என்று தெரிந்தும் 2-மணியிலிருந்தே தாய்மார்களும், மாணவர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும், நகர மன்ற உறுப்பினர்களும் நகரிலுள்ள பிரமுகர்களும், பொதுமக்களும் கூடிவிட்டார்கள்.

அங்கு கூடியிருந்த மக்களின் உள்ளமெல்லாம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி தங்களின் உள்ளத்தைக் கவர்ந்த மாவீரரின் வருகை எதிர்நோக்கி வரவேற்க ஆவலோடு எதிர்பார்த்திருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் கவர்னர் தினம் என்று ஒருநாள் குறிப்பிட்டு அன்று கவர்னரை அழைப்பார்கள். அவரை பவனி வர செய்வார்கள், ஆனால் இவ்வாண்டு வடநாட்டு கவர்னரை அழைத்து விழா நடத்தி வந்ததை மாற்றி, "அண்ணா தினம்" என்று பெயர் வைத்து, திராவிட நாட்டுத் தலைவரை அழைத்து விழா நடத்த ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். இது மக்களிடையே ஒரு பரபரப்பையும், ஒரு எழுச்சியையும், மகிழ்ச்சியை ஊட்டி வந்தது.

முன்பெல்லாம் இக் கழகத்தார் நடத்தும் கண்காட்சியை கவர்னர்களும், அமைச்சர்களும், பிரபல பெரிய மனிதர்களும் வந்து திறந்து வைத்துப் பேசுவார்கள். இவ்வாண்டு அதற்குப் பதில் மக்களின் உள்ளன்பைக் கொண்ட தலைவர்களையே அழைத்து விழாக்களை நடத்தினார்கள்.

அண்ணா அவர்கள் சரியாக நான்கு மணிக்கு எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் வந்தடைந்தார், அவர் வந்ததை அறிந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களை எஸ். ஐ. ஏ. ஏ. மைதான நிர்வாகிகளும், கண்காட்சி கண்ட்ராக்டர் திரு. மோகன், சி. ஆர். பாலசுந்தரம், சி. பஞ்சாட்சரம் ஆகியோர் வரவேற்றார்கள்.

திறந்த காரில் அறிஞர் அண்ணா அவர்களை நிற்க வைத்து, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை காரில் அமர வைத்து மைதானத்தைச் சுற்றி வரத் தொடங்கினர். அண்ணா அவர்கள் கைகளை கூப்பி மக்களை வணங்கினார். மக்களின் ஆரவாரமும் கை ஒலிகளும் கட்டுக் கடங்காதிருந்தது. கார் மைதானத்தைச் சுற்றி பவனி வந்தது. வேட்டுகளும், வெடிகளும் முழங்கிக் கொண்டிருந்தது. பாண்டு வாத்தியம் ஒலித்துக் கொண்டிருந்தது. காரின்முன் சிலம்பு விளையாட்டுகள் ஆடிக்கொண்டு வந்தார்கள்.

திரு. பஞ்சாட்சரம் இருவண்ணக் கொடி ஏந்தி வந்தார், கண்ட்ராக்டர் திரு. மோகன் அண்ணாவுக்குப் பாதுகாப்பாக நின்றிருந்தார்.

கண்காட்சித் தொண்டர்கள் அணிவகுத்து மரியாதை செய்தனர். இந்த வைபவங்களையெல்லாம் கடந்து மைதானமெல்லாம் சுற்றி அலங்கரிக்கப்பட்ட மேடையருகே அண்ணா பவனி வந்த கார் வந்தடைந்தது.

நகர மேயர் அப்துல்காதர் அவர்களும், கண்காட்சி நிர்வாகிகளும் வரவேற்று மலர்மாலை சூட்டி மேடைக்கு அழைத்து அமரச் செய்தனர்.

பின் குதிரைப் பந்தயப் போட்டி, ரேக்ளா போட்டிகள், உடற் பயிற்சிகள், வாள் போர், சிலம்பு விளையாட்டுகள், பொய்க்கால் குதிரை விளையாட்டுகள் நடைபெற்றது. சிறுமி சிமுபா பல அற்புதமான உடற் பயிற்சியை செய்து மக்களை மகிழ்வித்தாள்.

இந்த வைபவங்கள் முடிந்ததும் திரு. மோகன் எல்லோரையும் வரவேற்றுப் பேசியபின், எஸ். ஐ. ஏ. ஏ. கழகச் செயலாளர் திரு. மேனன் அவர்கள் வரவேற்றுப் பேசும்போது—

"மேயரவர்களே! நண்பர்களே! தாய்மார்களே! பெரியோர்களே! இன்று எங்களுக்கு மகிழ்ச்சியான நாள். எங்கள் அழைப்பிற்கிணங்கி அண்ணா அவர்கள் வந்து இந்த நாளைச் சிறப்பித்தமைக்கு மகிழ்வதுடன் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இங்கு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்று பேசினார்.

திரு. மோகன் அவர்கள் முதலில் எஸ். ஐ. ஏ. ஏ. கழகச் செயலாளர்களுக்கும், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், மேயர் அப்துல்காதர், கருணாநிதி, அன்பழகன் ஆகியோருக்கு மலர் மாலைகள் சூட்டினார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அண்ணா அவர்கள் பரிசளித்தார்கள்.

அறிஞர் அண்ணா அவர்கள் பெருத்த ஆரவாரத்திற்கிடையே பேசியதாவது—

மேயரவர்களே! நண்பர்களே! தாய்மார்களே! இன்று இந்த கண்காட்சி நிர்வாகிகளும், என் அருமை நண்பர் மோகனும் என்னையழைத்து, இந்த விழாவில் கலந்து இங்கு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கும் என்னை இவ்வளவு சிறப்பாக வரவேற்று பெருமைபடுத்தியதற்காக பெரிதும் மகிழ்வதோடு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாலைவேளையில் நாமெல்லாம் மகிழ்ச்சியடையும்படியாகவும், கண்டு களிக்கும்படியாகவும், பல போட்டிகளும், விளையாட்டுகளும் நடைபெற்றது. நானும் மகிழ்ந்தேன். அதேபோல் நீங்களும் கண்டு மகிழ்ந்தீர்கள்.

இந்த நகரில் பல ஆண்டுகளாக இந்த தென்னிந்திய விளையாட்டுக் கழகத்தார் கண்காட்சியை நடத்தி வருகிறார்கள். இவர்கள்தான் முதன் முதலாக கண்காட்சியைத் தொடங்கியவர்கள்.

இந்த கண்காட்சியை காண்பதற்காக தென்னகத்தின் பல பகுதிகளிலிருந்து மக்கள் வந்து கண்டு களித்து வந்தனர். இதற்கு மக்கள் ஆதரவும் மிகுந்திருந்தது.

(13-ம் பக்கம் பார்க்க)

இந்தியா எப்போது ஒன்றாக இருந்தது?

எந்தக் காலத்திலும் நாமும் வடவரும் சேர்ந்து வாழ்ந்ததில்லை!

டி. கே. சீனிவாசன் பேச்சு

சென்னை திருவல்லிக்கேணி 74-வது வட்டம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேயர்—துணை மேயர் பாராட்டுக் கூட்டமும், மேற்படி வட்டத்திற்கு நகர மன்ற உறுப்பினராக திருமதி அலமேலு அப்பாத்துரை அம்மையார் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக ஓட்டளித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும் 28—12—59ம் தேதி மாலை 6 மணிக்கு ஒரு கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு கழகச் செயலாளர் திரு. வேதாச்சலம் தலைமை வகித்தார். திருச்சி ராமசாமி இயக்கப் பாடல்கள் பாடி மக்களை மகிழ்வித்தார்.

மேயர்-துணைமேயர் அலமேலு அம்மையார் ஆகியோருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. தி மு.கழகம், எம். ஜி. ஆர். படிப்பகம் தென்னவர் மன்றம் ஆகியவைகளின் சார்பாக கைத்தறி துண்டுகளும் மலர்மாலைகளும் மேயர்-துணை மேயர் அம்மையார் ஆகியோருக்குப் போடப்பட்டது.

கூட்டத் தலைவர். திருவாளர்கள் பாண்டியன் அசோக் முதலியவர்கள் நகரமன்ற உறுப்பினர் தேர்தல் பற்றியும், அப்போது தி. மு. க. எந்த விதமான எதிர்ப்புகளைச் சமாளித்ததென்பது பற்றியும், தேர்தலுக்குப் பின் நடந்த கலவரங்களைப் பற்றியும், தி. மு. கழகத்தை எதிரிகள் தாக்கி வருவதற்குப் பதில் கூறியும் விளக்கமாகப் பேசினார்கள். மேயர்—துணைமேயருக்கு அளித்த வரவேற்பு பத்திரத்தில் வட்டத்தில் ரோடு வசதி, மின்சாரம், சுகாதாரம் இவைகள் மோசமாக இருப்பதைப் போக்க வேண்டியதைப் பற்றியும், அயோத்திபுரத்தின் நிலைமையை விளக்கியும் அதைச் சீர்திருத்த வேண்டியதைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள்.

வரவேற்புக்குப் பதிலளிக்கும் முகத்தான் துணை மேயர் திரு. தேவராசன் பேசியதாவது:—

அன்புள்ள மாநகராட்சி மன்றத் தலைவர் அவர்களே! கூட்டத் தலைவரவர்களே, நண்பர்களே, எனக்கும் மேயரவர்களுக்கும், பாராட்டும் வரவேற்பும் அளிக்கும் இந்த நிலையில் எங்களுக்கு மிகவும் வருந்தக் கூடிய செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

இந்த வட்டத்துக்கு அடுத்த வட்டத்தில் தீ பற்றி எரிவதாகவும். வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், அறிவித்திருக்கிறார்கள்! நாங்கள் செல்ல வேண்டும். மற்றும் இன்னும் மூன்று வட்டங்களில் எங்களுக்குப் பாராட்டு இருக்கிறது. அங்கும் செல்ல வேண்டும், ஆகவே உங்களிடையே நீண்ட நேரம் இருக்க முடியாதமைக்கு வருந்துகிறேன்

எங்களுக்களிக்கப்பட்ட வரவேற்பில் இந்த வட்டத்திலுள்ள குறைபாடுகளைப் பற்றியும், தண்ணீர்—மின்சாரம் ரோடுகள் பற்றியும் கூறியிருக்கிறீர்கள் நானும், மாமன்றத் தலைவரும் அதை அவசியம் கவனித்து தக்கது செய்வோம். நமக்கு முன் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் ஏழைகள் வாழும் பகுதிகளைக் கவனியாது உங்கள் பகுதியைவிட பல பகுதிகளை மோசமாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். எனது வட்டத்தில் ஏழைகள் வசிக்கும் இடங்களை வந்து பார்த்திருந்தால் தெரியும். அவ்வளவு கேவலமாக வைத்திருந்தனர் அவைகளை யெல்லாம் சீர்திருத்தி நல்ல நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதே போன்று நானும் மேயரும் பல பகுதிகளில் கேவலமாக இருந்ததைச் சீர்திருத்தி இருக்கிறோம் நான் இனி உங்கள் பகுதியைத்தான் கவனிக்கப் போகிறேன் இன்னும் 6 மாதங்களில் உங்கள் பகுதியின் குறைபாடுகளை நீக்குகிறேன். அயோத்தி நகர் பகுதியில் சில சட்டப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளையும் அதிகாரிகளுடன் கலந்து ஆவன செய்கிறேன், இன்று கூட எங்கள் நிதிக் குழுத் தலைவர் போரிங் குழாய்களை வட்டத்துக்கு 10 வீதம் வைக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார், எங்கள் காலத்திலேயே எங்களாலானதை உங்கட்குச் செய்வோம் என்பதை உங்கட்கும், உங்கள் வட்ட நகர உறுப்பினருக்கும் தெரிவித்துக் கொண்டு நான் நெருப்புப் பிடித்த இடங்களுக்குச் செல்கிறேன் விடை தாருங்கள் என்று கூறி முடித்தார்.

பின் மேயர் திரு. எம். எஸ். அப்துல் காதர் அவர்கள் பேசியதாவது:

துணைமேயர் அவர்களே! தலைவரவர்களே டி. கே. சி. அவர்களே! எங்களுக்கு நீங்கள் அளித்த பாராட்டுக்கும், வரவேற்பிற்கும் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் இந்த நேரத்தில் பேசும்படியான நிலையிலில்லை இந்த வட்டத்துக்கு அடுத்து வட்டத்தில் நெருப்புப் பிடித்துக் கொண்டதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. நான் அங்கு அவசரமாகச் செல்ல வேண்டும் நீங்கள் குறிப்பிட்டிருக்கிற குறைகளை மிகவும், அவசரமாகவும் அவசியமாகவும் கவனித்து ஆவன செய்கிறேன். என் மனம் நெருப்புப் பிடித்த இடத்தில் இருப்பதால் அங்கு செல்லவிடை தரவேண்டுகிறேன் மீண்டும் ஒரு முறை வந்து உங்களைச் சந்திக்கிறேன் வணக்கம்.

பின் நகர மன்ற உறுப்பினர் திரு. தி. க. நல்லதம்பி நகரமன்றம் செய்து வரும் பணிகளையும் எதிரிகளின் ஏசல்களுக்கும் பதில் கூறியும், பேசி விட்டு உடனே தீ பிடித்துள்ள பகுதிக்குச் சென்று விட்டார்.

அடுத்து—வட்டத்து நகரமன்ற உறுப்பினர் திருமதி அலமேலு அப்பாதுரை அவர்கள் பேசும் போது தமக்களித்த வரவேற்புக் நன்றி கூறி, தமக்கு வாக்களித்த தாய்மார்களுக்கும், பெரியோர்களுக்கும் நன்றி கூறி இந்தப் பகுதியில் உள்ள குறைபாடுகளை நீக்க மேயர்—துணை மேயர் ஆதரவு நாடியிருக்கிறேன். வெகு விரைவில் போக்குவதாகவும், தண்ணீர், மின்சாரம், ரோடு வசதிகள் பற்றி ஏற்பாடுகள் செய்துவருகிறேன். அவைகள் சீக்கிரமே நிறைவேறும். தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளைப் பள்ளிக் அனுப்புங்கள் நான் நெருப்புப் பிடித்துள்ள பகுதிக்குச் செல்கிறேன்.

அந்தப் பகுதியில் தான் நமது கா. அப்பாதுரையார் சென்ற சட்டமன்ற தேர்தலுக்கு நின்ற இடம்! ஆகவே நானும் அங்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் ஆகவே விடை கொடுக்க வேண்டுகிறேன்.

பின் "தாய் நாடு" ஆசிரியர் திரு. டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசினார் அவர் பேசுவதற்கு முன் தி.மு.கழகத்தைச் சேர்ந்த திரு. மணி அவர்களின் பெண் குழந்தைக்கு ராணி என்று பெயரிட்டு விட்டுத் தொடர்ந்து பேசியதாவது:—

அருமைத் தலைவரவர்களே! நண்பர்களே! மேயர்—துணைமேயர் அவர்களே!

நாம் இங்கு நமது மேயர், துணைமேயருக்குப் பாராட்டும், வரவேற்பும் கொடுக்கிறோம். தினம், தினம் வட்டத்துக்கு வட்டம் பாராட்டும், வரவேற்பும் நடக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கும் இந்தநேரத்தில் நமக்கு வருத்தம் தரும்படியான செய்தியும் வந்திருக்கிறது நமது பக்கத்து வட்டத்தில் தீ பிடித்து எரிகிறது என்ற செய்தியாகும், அந்த வேதனையை நீக்குவதற்கு நமது மேயரும்—துணை மேயரும், நகர மன்ற உறுப்பினர்களும் சென்று விட்டார்கள். அவர்கள் நகரத்தில் பற்றியிருக்கும் தீ விபத்தைப் போக்கட்டும் நாம் உலகத்தில்—நாட்டில்பற்றியிருக்கும் தீ விபத்துக்களைக் கவனிப்போம்.

நாம் நமது மேயர்களைப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் நமது பணிகளை, நமது கொள்கைகளை மக்களிடம் கூறி வருகிறோம். தி.மு, கழகம் நாட்டில் வளர்ந்து வருகிறது. வாலிபர்கள் உள்ளத்தைத் தொட்டிருக்கிறது. அதனால் மேலும் மேலும் வளர்ந்து வருகிறோம். இதைக் கண்டு நீ ஏன் பயப்படுகிறாய் எங்களைத் திட்டுகிறாய். தூற்றுகிறாய், வைகிறாய். அதே போன்று எங்கள் கூட்டங்களைப் பார்த்ததும் வயிற்றெரிச்சல் படுகிறாய் நாங்கள் இன்று ஒரு கூட்டம், நாளை ஒரு கூட்டம், நடத்துகிறோம் நாளை மறுதினம் ஒருகூட்டம், நாலாம் நாள் ஒருகூட்டம் இப்படி தொடர்ந்து நடக்கிறது. இப்படிவட்டத்துக்கு வட்டம் நடக்கிறது. மக்கள் கூடுகிறார்கள். இதைக்கண்டு காங்கிரசாருக்குக் கோபம் வருகிறது. தூற்றுகிறார்கள் அவர்களும் கூட்டம் போடுகிறார்கள். கூட்டத்திற்கு மைக் வைக்கிறார்கள், மேஜை வைக்கிறார்கள். லைட் போடுகிறார்கள். ஆனால் கூட்டம் மட்டும்வருவதில்லை. அப்படி ஒரு சிலர் கூடினாலும், அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கேட்கநம்மவர்கள் போகிறார்கள் இதைக் கண்டு வேதனைப்படுகிறார்கள். நாம் என்ன செய்வது?

முன் நமது அரசு மேயராக வந்தார் சிவசங்கரன் துணைமேயராக வந்தார். இப்போது நமது காதர் வந்திருக்கிறார். தேவராசு துணைமேயராக வந்திருக்கிறார். பாராட்டுகள் நடக்கிறது, இதை கண்டு என்ன இவர்கள் காணாததைக் கண்டு விட்டார்கள். இனமும் பாராட்டு என்று கேட்கிறார்கள் அவர்களும் மேயர்களாக வந்தார்கள். நாமும் மேயர்களாக வந்தோம்—அவர்கள் வரவேற்பு-பாராட்டுவேறு! நம்முடைய மேயர்கள் பாராட்டும் வரவேற்பும் வேறு. அவர்கள் சந்தித்தவர்கள் வேறு பகுதியினர். நாம் சந்திக்கின்றவர்கள் ஏழை மக்கள் ரோடுகளில் வாழ்வோர். இதனால் அவர்களுக்குக் கோபம் வருகிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

இந்திய அரசியல் சட்டம் நமக்கு ஏற்றதல்ல!

திராவிடரை வாழ்விக்காத காங்கிரஸ் ஏன்?

(டி, கே. சீனுவாசன் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நீ என்னென்ன சொல்லி கேலி செய்து வந்தாயோ அதையெல்லாம் செய்து காட்டினோம். எங்களை அழித்து விடுவோம் என்று சொல்லிப் பரிகசித்தாய். நீயே பயப்படும்படி வளர்ந்தோம். எங்களுக்கு மக்கள் ஆதரவில்லை என்றாய்! கூட்டங்களில் மக்கள் கூடுவதைப் பார்த்தாய்! பணக்காரக்கட்சி என்றாய் ஏழைகள், தொழிலாளர்கள், குடிசைகளில் வாழ்வோர், நடைபாதைகளில் வாழ்வோர் கூடுவதைக் கண்டாய் நாங்கள் பெரியாரிடம் இருந்து பணியாற்றிவரும் போது எங்கள் கட்சியைப் பற்றி படித்தவர்கள் இல்லாத கட்சி, வாலிபர்கள் இல்லாத கட்சிபாமரர்களும்,எழுத்து வாசனை யற்றவர்களும் இருக்கிறார்கள். பட்டம் பெற்றவர்களே இல்லை! உலகம் ஞானம் இல்லாதவர்கள் என்று கூறி ஏசி வந்தாய்.

பின், படித்துப் பட்டம்பெற்ற அறிஞர் அண்ணாவைக் காண்பித்தோம். பின் நெடுஞ்செழியனைக் காண்பித்தோம், அன்பழகனைக் காண்பித்தோம்! மற்றும் பலப் பல படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களைக் காண்பித்தோம். அததோடு விட்டாயா மீண்டும் எங்களை கலைத் துறையில் மிளிரும் படியான கலைஞர்கள் உண்டா என்றாய் கலைஞர் கருணாநிதியைக் காட்டினோம்! அதோடு விட்டாயா? கவிஞர் உண்டா என்று கேட்டாய், கவிஞர் கண்ணதாசனைக் காட்டினோம்! இவர்களுக்கு மேடையில் பேசத்தான் முடியும் சட்ட மன்றத் தேர்தலில் நிற்க முடியுமா என்று நையாண்டி செய்தாய் 150 இடங்களில் நின்றோம் 15 பேர்கள் சட்ட மன்றத்திற்கு வந்தோம்! நிர்வாகப் பொறுப்பு ஏற்க முடியுமாஎன்று வீராப்புடன் கேட்டாய் இதோ என்று எங்கள் அரசுவையும், அப்துல்காதரையும் மேயராக்கிக் காண்பித்தோம்! சட்டமன்றத்தில் சட்டப்படி பேச முடியுமா என்று கேட்டாய்? உங்களுடைய சர்க்காரும், அமைச்சர்களும் நாட்டு மக்களின் அல்லல்களைப் போக்காது பட்டினியால் வாடவைக்கும் போக்கை கண்டித்தும், அதற்கான வழிவகைகளையும் ஆதாரங்களோடு வரிசை வரிசையாக உலகமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், உங்கள் அமைச்சர்கள் திகைக்கும் வண்ணம் எங்கள் அண்ணாவும், மற்றவர்களும் பேசினார்கள். அதோடு விட்டாயா? திட்டங்கள் தீட்டத் தெரியுமா என்று கேட்டாய் மக்கள் நல்வாழ்விற்குத் தேவையான பல திட்டங்களை எங்கள் அண்ணா அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அடுக்கடுக்காகத் தந்தனர் அதை உன்னால் நிறைவேற்ற முடிந்ததா? அதைநிறைவேற்றும் பொறும்பு, சுதந்திரம், அதிகாரம் இங்குள்ளோருக்கு ஏது டில்லியை எதிர்க்க வேண்டியவர்களாயிற்றே அது உங்களால் எப்படி முடியும்?

காரியங்கள் ஆற்றவக்கு வகையில்லாவிட்டாலும் எங்களை ஏசுகிறாய், தூற்றுகிறாய், அழிக்கிறேன் என்கிறாய், ஒழிக்கிறேன் என்கிறாய் எது வேண்டுமானாலும் பேசு, செய். உன்னாலும் உன் பேச்சாலும் நாங்கள் அழிந்தோ, ஒழிந்தோ விட மாட்டோம் வளர்வோம் நீ தேய்ந்து போவாய் எங்களுடைய பிரச்சாரங்களைப் பார்த்து சில அமைச்சர்கள் நாங்கள் நாட்டு மக்களிடையே பிரிவினை மனப்பான்மையையும் கிளப்பி வருகிறோம் என்று பேசி வருகிறீர்கள்,

நீங்கள் அன்று என்ன செய்தீர்கள். வெள்ளையன் சுரண்டல்காரன், கொள்ளைக்காரள், ஏதேச்சாதிகாரம் உள்ளவன் அவன் வெளியேற வேண்டுமென்று சொன்னீர்கள்! "வெள்ளையனே வெளியேறு" என்றீர்கள்! அவன் வெளியேறினான்! வடநாட்டுக் கொள்ளையரிடம் ஒப்படைத்துப்போனான்! ஆனால் நீங்கள் சொன்ன கொள்ளைகள் ஒழிந்ததா? லஞ்சங்கள் ஒழிந்ததா? அதைவிட மோசமாக நடக்கிறதே! அதைப் போக்க எங்கள் நாட்டை தனியாகக் கேட்கிறோம்! இதுதப்பா எங்களைத் துரோகிகள், துண்டு போடுகிறவர்கள் என்று தூற்றினால் தூற்றிக்கொள். அதைப் பற்றி எங்கட்குக் கவலை இல்லை!

எங்களைத் "திட்டுகிறார்கள், திட்டுகிறார்கள்" என்று மேடை மேடைக்குச் சென்று அமைச்சர்கள் பேசுகிறார்கள்!

திட்டாமல் என்ன செய்வார்கள், யாரிடம்தான் பாராட்டு பெற்றிருக்கிறீர்கள். என், ஜிஓக்கள், ரெயில்வே ஊழியர்கள், தபால் தந்தி ஊழியர்கள், வியாபாரிகள், விவசாயிகள்நாட்டிலுள்ள ஏழை மக்கள் ஆகிய எல்லோருடைய வெறுப்புக்கும்,அறுவறுப்புக்கும் ஆளாகி உள்ளீர்கள்! நாட்டு மக்கள் இன்றுபடும் தொல்லைகளுக்கும் வாழ வசதிகளின்றி திண்டாடவும் செய்திருக்கும் போது திட்டாமல் என்ன செய்வார்கள்? பாராட்டவாச் செய்வார்கள்! மந்திரிகளே தெருத் தெருவாகச் சென்று அதைச் செய்திருக்கிறோம் இதைச் செய்திருக்கிறோம் என்று பேசி வருகிறார்கள்!

மந்திரிகள் காமராஜர்,கக்கன், சுப்பிரமணியம், பக்தவத்சலம் முதலியவர்கள் ஊர்ஊராகவும் பேசி வருகிறார்கள்! போதாததற்கு மந்திரி ர்ர்மையாவும்பேச ஆரம்பித்து விட்டார்!

சென்ட்டு வாசனையுடையது என்று காட்டவேண்டுமானால்சட்டையிலோ, துணியிலோசென்ட்டைப் போட்டு மேடைக்கு வந்தால் அந்தவாசனையைப்பார்த்து சென்ட்டு வாசனையாக இருககிறது என்று பாராட்டுவார்கள், அதை விட்டு சென்ட்டையே காட்டாது வாசனை இருக்கிறதென்றால் யார் நம்புவார்கள். அதுபோல் நீ ஏதாவது செய்திருந்தால் நம்புவார்கள், பாராட்டுவார்கள். குறை கூறுகிறார்கள் என்றால் ஏன் குறை கூறமாட்டார்கள்!

சட்டமன்றத்தில் ஒரு பெண் அங்கத்தினர், சட்டமன்றத்தில் வால் ஆட்டினால் ஒட்ட அறுத்து விடுவோம என்று கூறினர்! அதைக் கேட்ட எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இப்படி மன்றத்தில் பண்பின்றியும், மன்ற கௌரவத்திற்கு மாறாகவும் பேசலாமா என்று கேட்டார்கள்

ஆனால் அதற்கு மந்திரி பக்தவத்சலம் அங்கத்தினர்களுக்குத் தான் வாலில்லையே ஏன்கோபப் படுகிறீர்கள் என்று பதில் கூறினார். பண்பிழந்து பேசினார்என்றால் உங்களுககு வாலில்லையே என்று பக்தவத்சலம் கூறுகிறார்! வாலில்லையென்று வேறு யாராவது சொன்னாலும் பொறுத்தமாக இருக்கும்! மந்திரி பக்தவத்சலம் சொல்லுகிறாரே சரி தானா? இப்படியெல்லாம் பேசுகிறார்கள்! நாம் ஏதாவதுபேசினால் கோபப்படுகிறார்கள்!

தமிழ்நாட்டுகாங்கிரஸ் தலைவர் ஓ. வி. அளகேசன் அவர்கள் இங்கு பக்கத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசும்போது சீனர்கள் இந்திய எல்லைக்குள் வருகிறார்கள்! அதை மறைக்க கம்யூனிஸ்டுகள் வேறு என்னவென்னவோ கிளர்ச்சி செய்து நாட்டைக குழப்புகிறார்கள் என்று பேசினார்! கம்யூனிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேச வரவில்லை! ஆனால் திரு அழகேசன் பேசுவதைப் பார்த்து எனக்கு வேடிக்கையாகவும் அதே நேரத்தில் வேதனையாகவுமிருக்கிறது!

சென்ற மூன்று நான்கு தினங்களுக்கு முன்பு இந்தியப்பிரதமர் பண்டித ஜவஹாலால்நேரு அவர்கள் அலாகாபாத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இந்திய எல்லையில் போர் மூண்டிருப்பதாகக கூறுவது சரியல்ல, போர் நிலைமைகள் ஏற்பட்டால் நாங்கள் கூடிப்பேசி சரி செய்து கொள்வோம்! வீணாக நாட்டில் போர் எண்ணங்களை வளர்த்தி பீதியை உண்டாக்க வேண்டாம் என்றும் ஆபத்தான நிலைகள் அங்கு இல்லை" என்று கூறியிருக்கிறார்.

(11-ம் பக்கம் பார்க்க)

சோற்றுக்காக அல்ல சொந்த நாடு கேட்பது!

"இன்பத் திராவிட நாடே என்று பாடி விட்டால் மட்டும் சோற்று பஞ்சம் தீர்ந்து விடுமா? அப்படித் தீருவதாய் இருந்தால் நானும் அவர்களோடு சேர்ந்து தாளம் போடத் தயார்" என்று முதலமைச்சர் கனம் காமராஜர் ஒரு கூட்டத்தில் பேசினாராம்!

சாதாரண காமராஜர் பேசி இருந்தால் இதைப்பற்றி நாம் கொஞ்சமும் கவலைப்பட்டிருக்க மாட்டோம்! அரசியல் தெரிந்த காமராஜர், அமைச்சராக இருக்கும் காமராஜர் இப்படி பேசினால் உண்மையிலேயே நாம் வருத்தப்படத் தான் வேண்டி இருக்கிறது!

சொந்த நாடு கேட்பதற்கும் சோற்றுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது? "வெள்ளையனே வெளியேறு" என்று சொன்னது சோற்றுக்காகத் தானா? வயிறு புடைக்க சோறு கிடைத்தால் மீண்டும் வெள்ளைக்காரனிடம் காமராஜர் அடிமைப் பட்டுக் கிடக்கத் தயாராக இருக்கிறாரா?

சோற்றுக்கா மட்டும் தான் மனிதன் வாழ்கிறான் என்றால் வீடும், வாசலும், பெண்டும், பிள்ளைகளும் தேவையில்லை! தருமபுரம் மடத்திலோ, திருவாவடுதுரைமடத்திலோ சேர்ந்தால்வாழைஇலை சாப்பாடு கிடைக்குமே! சாப்பிட்டு விட்டு "காயமே இது பொய்யடா காத்தடைத்த பையடா" என்று பாடிக் கொண்டிருக்கலாமே!

திண்ணை மடத்து சாமியார்கள் பேசவேண்டிய பேச்சை அமைச்சர் பேசுவது வருந்தத்தக்கது. மிக வருந்தத்தக்கது!

பிறரை வாழ வைக்கின்ற நாம்—பிரிந்தால் வாழ மாட்டோமா?

(டி. கே. சீனிவாசன் பேச்சு)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அதே கூட்டத்தில் பிரதமர் நேரு அவர்களிடம் 10000 பேர்கள் "இரத்தத்தில் கையெழுத்திட்டு நாங்கள் இந்திய எல்லையை மீட்கவும், எதிரிகளை இந்திய எல்லைக்குள்வராது தடுக்கவும் தயாராக இருக்கிறோம்" என்று எழுதிக் கொடுத்திருந்தார்கள்! அதற்கு நேரு அவர்கள் மிகவும் கோபமாக உங்களுக்குப் புத்தியில்லையா? இந்த மாதிரியான வேலையில் நீங்கள் ஈடுபடவேண்டாம்! உங்கள் வேலையைப் பாருங்கள் போர் ஒன்றும் இப்பொழுதில்லை அந்த மாதிரி கிளர்ச்சியில் ஈடுபட வேண்டாம் என்று கடுமையாகவும், கோபமாகவும் பேசியிருக்கிறார். இந்த இருவருடைய பேச்சில் யாருடைய பேச்சை நம்புவது? இந்தியப் பிரதமருவையா? தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அழகேசனையா?

ஒன்றாக இருந்து வரும் நாட்டைத் துண்டுபோட திராவிட முன்னேற்றக் கழகம் வேலை செய்கிறது என்று காங்கிரஸ் அமைச்சர்கள் நம் மீது குற்றம் சுமத்துகிறார்கள். என்று ஒன்றாக இருந்தது இந்தியா. வாயில் சொல்லலாம் ஒன்றாக இருந்ததாக நாமும்! வடவரும் என்றும் ஒன்றாக இருந்ததே இல்லை, நமது மக்களுடைய பசிபட்டினி இவைகளைப் பற்றி அவர்களுக்கு அக்கரையே இருந்தது கிடையாது. மத்திய சர்க்கார் வடநாட்டாருக்கு ஒரு நீதியும், நமக்கொரு நீதியும் செய்து வருகிறார்கள். நாம் அதை உணராது அவன் பின்னால் சென்று அவன் "போலோ பாரத்மாதாக்கிஜே" என்று சொன்னால் அதையேகத்திக்கொண்டுதிரிகிறோம்! நம்மீது அக்கறையும் அன்பும் உள்ளவர்களானால் பசி—பட்டினி வேலையில்லாத் திண்டாட்டம் வளரவிட்டிருப்பார்களா? வெளிநாடுகளுக்குச் சென்று பிச்சைஎடுக்கச் செய்வார்களா? இதையெல்லாம் பார்த்துத்தான் அவர்கள் பிடியிலிருந்து விலக வேண்டுமென்கிறோம்.

இதையெல்லாம் சிந்திக்காது பாரதம் பிரிக்கக் கூடாது ஒன்றாக இருக்க வேண்டும். துண்டு போடாதே என்று கூறினால் என்ன அர்த்தம்! ஒரு குடும்பத்தில் மனைவியும் கணவனுமிருக்கிறார்கள்! கணவன் மனைவியைக் கவனிப்பதில்லை, வீட்டிற்கும் வருவதில்லை! செலவுக்கும் பணம் தருவதில்லை. வீட்டிற்கு வந்தாலும் அடித்துத்துன்புறுத்துவது இப்படிச் செய்தால் அந்த மனைவி எப்படி கணவனுடன் வாழ்வாள்! அவளுக்குக் கணவன் என்ற பற்று ஏற்படும். அவன் வீட்டிற்கு வராமலிருந்தால் போதும் என்று எண்ணுவாள்! அதுபோன்று நம்மை கவனியாதும், நம்மிடம்அன்பில்லாமலும் துன்புறுத்திக் கொண்டிருப்பவர்களுடன் எப்படி ஒன்றாக இருக்க முடியும். அதனால் தான் பிரிந்து தனியாக இருக்கப் பிரியப் படுகிறோம்! இதைப் புரியாது எங்கள் மீது இங்குள்ளோர் பாய்கிறார்கள்! இது சரியா எண்ணிப் பாருங்கள்! நமக்குத்தான் இப்படியென்றால் போதும்,நமது அமைச்சர்கள்நிலையும் அப்படித்தான் இருக்கிறது! அவர்களுடைய நிலையை நினைக்கும் எண்ணிப் பார்க்கும் போது பரிதாபமாகஇருக்கிறது! அதைப் பார்க்கும்போது ஒரு கதைஞாபகம் வருகிறது!

ஒரு குடும்பத்தில் மனைவியும், கணவனும் வாழ்ந்து வந்தார்கள் தனது கணவனிடம் ஒரு நாள் அந்த மனைவி ஆசையாக, அன்பாக மகிழ்ச்சியோடு, "புதிதாக தாய் மகளுக்குக் கட்டிய தாலி" படம் வருகிறது! அதைப் பார்க்கப் போகலாமா என்று கேட்டால் அந்தக் கணவன் அம்மாவைக் கேள் என்றானாம். "கட்டிக் கொள்ள புடவை இல்லை ஒன்று வாங்கிக் கொடுங்கள் என்றால் அப்பாவைக் 'கேள்" "பசிக்கிறது உணவு ,சமைக்க வேண்டும். பணம் கொடுங்கள்" என்றால் அப்பாவைக் கேள்என்றால் அந்த மனைவி அந்த கணவனைஎன்ன நினைப்பாள்,எப்படி அவனுடன் வாழ எண்ணுவாள் இப்படியே அவன் சொல்லிக் கொண்டிருந்தால் பார்க்கின்ற வரை பார்த்துவிட்டு உடனே தாய் வீடு போய் விடுவாள்.

ஆகவே எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்க வேண்டும்—டெல்லிக்குப் போக வேண்டுமென்றால் இந்தவக்கற்ற—வகையற்றகையாலாகாத—சொரணையற்ற இந்த மந்திரிகளை எப்படி நம்பிக் கொண்டிருப்பது. அதற்கொரு வழி செய்ய வேண்டாமா விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது அரிசி வாங்க முடியவில்லை! விலையைக் குறைக்க வேண்டுமென்றால் முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்டும் சேர்ந்து கலகம் செய்கிறது! மக்களைக் குழப்புகிறதுஎன்கிறார்கள்.இது சரியா? கம்யூனிஸ்டுக்காரனுக்கும், முன்னேற்றக் கழகக்காரனுக்குத்தான் விலை ஏறி இருக்கிறதா? கதர் சட்டைக்காரனுக்கு இது பாதிக்காதா? அவன் கடைகளில் சாமான் வாங்குவதில்லையா? அல்லது கதர்சட்டை என்பதால் விலை குறைவாகக் கிடைக்கிறதா? விலைவாசி குறைந்து மக்கள் வாங்குகின்ற வகையில் பொருள்கள் கிடைக்க வேண்டுமென்றால்இதில் தகராறு ஏன் இருக்க வேண்டும், காங்கிரஸ்காரன் என்றால் ஒரு ரூபாய் இரண்டணா விற்குவிற்கும் அரிசி பத்தணாவிற்குக் கிடைக்கிறதா? இதில் சட்டை வித்தியாசம் வேண்டாம். கதர் சட்டைக்காரனாக இருந்தாலும் சரி, சிகப்புச் சட்டைக்காரனாக இருந்தாலும் சரி விலைவாசிக் கொடுமைமக்கள் எல்லோரும் நாட்டில் விலைவாசிகள் உயர்ந்து விட்டது தாங்க முடியவில்லை, வாங்கும் சக்தி இல்லை இதை சர்க்கார் கவனிக்க வேண்டுமென்று கேட்டால் அவர்கள் கவனியாதுவிலைவாசிகள் ஏறியிருப்பது தெரியாதவர்கள் போல் இருக்கிறார்கள்.

சர்க்காரே உணவு தானியங்களை வாங்கி மக்களுக்குக் கொடுக்கப் போவதாகச் சொல்லப் படுகிறது. இந்திய சர்க்கார் 200 கோடி ரூபாய்க்கு உணவு தான்யங்கள் வரவழைக்கப்போகிறது என்றார்கள். எப்படி வரவழைத்தாலும் மக்களுக்கு சரியாக வினியோகிப்பதில்லை. 200 கோடி என்கிறபோதுபிரமாதமாகத்தான் இருக்கிறது. பெரிதாகவும்தான் இருக்கிறது.அதைச் சில்லரையாக மாற்றினால் ஹைகோர்ட்டு கட்டிடத்தைவிட 10 மடங்குஉயரமாகத்தானிருக்கும். அதனால்நமக்கென்னலாபம் அரிசி கொள் முதல் செய்யாது வடநாட்டுக்காரர்களுக்குத் தேவைப்படும் கோதுமையை வாங்குகிறார்கள் இதைக் கேட்டால் வடநாடு தென்னாடு என்று பேதம் பேசுகிறோம் என்கிறார்கள்.

சமீபத்தில் பர்மாவிலிருந்து பர்மா வியாபாரத் தலைவர் டில்லிக்கு வந்திருந்தார். அவர் வியாபாரிகள் கூட்டத்தில்பேசும் போது, பர்மா நாட்டில் அரிசி அதிகமாக விளைந்திருக்கிறதென்றும், இந்திய சர்க்காருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறதென்றும் அவர் கூறினார், ஏன் நமது மந்திரிகள் வற்புறுத்தி குறைந்த விலைக்கு அரிசி கிடைக்க வழி செய்யக்கூடாது.

அந்த திறமையோ, தைரியமோஇவர்களுக்கு ஏது. இவர்கள்கொலுபொம்மைகள் தானே இவர்களைச் சொல்லி என்ன பயன்?

நாம் திராவிடநாடு பிரிய வேண்டுமென்றால் பாராளுமன்றத்தில்உங்களுக்குபலமிருக்குமா என்கிறார்கள். பாராளு மன்றத்தில் மொத்தம் 506 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இதில் பம்பாய், உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளுக்கு மட்டும் அதிகமாக சரிபாதி அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எது சொல்கிறார்களோ அவைகள் தான் நடைபெறும். அந்த நிலையில் இருக்கிறது.

அவர்கள் எதைச் சொல்லுகிறார்களோ அது பாராளுமன்றத்தில் நிறைவேறும். அவர்கள் கல்லைத் தின்ன வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தால் இது முடியுமா, இப்படி தீர்மானம் கொண்டு வரலாமா என்று எதிர்க்கட்சி எதிர்த்தால் உடனே ஓட்டுக்கு விடப்பட்டு பெரும்பான்மையோரைக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றுவார்கள்! அதுபோன்று இனி பெண்கள் குழந்தை பெறுவதை விட்டு, ஆண்கள் குழந்தைபெறவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தால் பெரும்பான்மை பலத்தால் நிறைவேற்றுவார்கள்,இது முடியுமா சாத்தியமாஎன்பதல்ல

(12-ம் பக்கம் பார்க்க)

நாம் நொண்டிகள்! அவர்களோ குருடர்கள்!

"பத்து நொண்டிகள் சேர்ந்து கொண்டு ஒரு திடகாத்திர மானவனை என்ன செய்ய முடியும்" என்று காமராஜர் கேட்டாராம்! எதிரி திடகாத்திர மானவனாக இருந்தால் நொண்டிகளால் ஏதும் செய்ய முடியாது! ஆனால் எதிரி குருடனாக இருந்தால் ஒரு நொண்டியே போதும்! அவர்கள் குருடர்கள் என்பது மட்டு மல்ல—ரப்பை (கண்ணில் தசை) வளர்ந்த குருடர்கள்!

அவர்களுக்கு அந்த ரப்பையை தூக்கிப் பார்த்தாக் தான் வெளி உலகம் தெரியும்! நாம் அந்த ரப்பையை கொஞ்சம் தூக்கி "பாருங்கள் உலகத்தை" என்றால் "ஆமாம் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றனர்" என்று சொல்லுகிறார்கள்! தூக்கியுள்ள ரப்பையை நாம் விட்டுவிட்டால் மறுபடியும் அவர்களுக்கு உலகம் தெரிவதில்லை! அந்த நிலைமையில் தான் மந்திரிகள் இருக்கிறார்கள்!

[அறிஞர் அண்ணா]

டெல்லியில் குவிந்திருக்கும் அதிகாரம் குறைய வேண்டும்!

மாநில அரசு அதிகாரமற்ற பொம்மை சர்க்கார்!

(டி, கே. சீனிவாசன் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மாதிரியான பலம் அவர்களுக்கிருக்கிறது என்பதைக் காட்டவே உதாரணத்திற்கு இதைக் கூறினேன், வடநாட்டுக்கு ஒரு நிலை. நமக்கு ஒரு நிலை என்பதான பேதங்கள் இருக்கிறது. அது அரசியல் சட்டத்திலேயே இருக்கிறது, ஆகவே அந்த அரசியல் சட்டமே நமக்குப் புறம்பானது. அந்தச் சட்டத்தில் தென்னகத்திற்கு பாதகம் விளைவிக்கும் படியான நிலையிருக்கிறது. அந்தச் சட்டத்தை தென்னகத்தார் ஒத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது என்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏதோ சாதித்திருப்பதாகக் கூறிக்கொண்டு திரிகிறார்கள். இவர்கள் கூறும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களாலும் நம் நாட்டிற்கு என்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கிறது. வடக்கே இருக்கும் ஐந்து மாகாணங்களுக்குத்தான் அதிக நன்மைகள் செய்திருக்கிறார்கள். பாராளு மன்ற அங்கத்தினர்கள் தொகையும் அந்த மாகாணங்களுக்குத்தான் அதிகம். தமிழ் நாடு, கேரளம், கன்னடம், ஆந்திரம்ஆகிய பகுதிகளுக்குக் குறைவான பாராளு மன்ற அங்கத்தினர் தொகை தான் வகுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் கூறுவதால் திராவிடக் கழகத்தார் அப்படியானால் எப்படி திராவிடநாடு பிரியமுடியும் என்பார்கள். இப்போதிருக்கும் முறையையே மாற்றவேண்டும், டில்லிக்கு இருக்கும் அதிகாரங்களை மாற்ற வேண்டும். இப்போதிருக்கும் அரசியல் சட்டத்தையே மாற்ற வேண்டும்.

இதை யெண்ணித்தான் அறிஞர் அண்ணா அவர்களும், மத்திய சர்க்காருக்கு இருக்கும் அதிகாரங்களை மாற்றி மாநில அரசாங்கத்திற்கு அதிக அதிகாரங்கள் இருக்க பாடுபட எல்லா கட்சியினரையும் அழைத்தார். இன்று மாநில அரசுகள் வெறும் அடிமையாக இருந்து வருகிறது.

நாம் நாடு பிரிந்து நாம் சுதந்திரமாக இருக்கவேண்டுமென்று கூறினால் பிரிந்தால் வாழ முடியுமா என்று கேட்கிறார்கள். ஏன் வாழ முடியாது. இப்போது என்ன வாழ்ந்து வருகிறோம். அப்போது வாழ முடியாது போய் விடுவோம்.

நமது நாட்டில் தங்கம் விளைகிறது. இரும்பு இருக்கிறது. மலைகள் இருக்கின்றன. காவேரி ஓடுகிறது. இதுபோன்ற எல்லா வளமிருக்கிறது. இதைக் கொண்டு வாழ்ந்திருக்கிறோம். பிறரை வாழவைத்திருக்கிறோம்.

இவர்கள் ஆட்சியில் நாம் என்ன வாழ்ந்து வருகிறோம்? என்ன வாழ வைத்திருக்கிறார்கள்? ஆகவே சரித்திரம் தெரியாமல் ஏதாவது பேசினால் நாம் அவர்களைப் பற்றி என்ன நினைப்பது?

நமது நாட்டு மக்கள் வேலையில்லாது பட்டினியால் வாடுவதுடன், வெளிநாடுகளுக்குச் சென்று அல்லல்படுகிறார்கள். பிச்சை யெடுக்கிறார்கள் என்று நாம் கூறுவதற்குப் பதிலளிக்கும் முறையில் காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். "வடநாட்டில் மட்டும் கஷ்டமில்லையா? மத்தியப் பிரதேசத்தில் போய் பார்த்தால் தெரியும், அங்கு தெருவில் பிச்சை யெடுத்துத் திரிவது. தெருவிலும், ரோட்டிலும் பரிதவித்து வாழ்ந்து வருவது." இங்கிருப்பது போன்றே ஏழைகள் அங்குமிருக்கிறார்கள்: அவர்கள் பூட் பாலீஸ் போட்டு பிழைக்கிறார்கள் என்று.

அங்கு பிச்சை எடுத்துக் கொண்டு வாழ வகையின்றி தெருவிலும், ரோட்டிலும் கிடப்பவர்கள் யார், வடவரா? தென்னகத்தில் வாழ வகையின்றி பிழைக்கச் சென்று, அங்கும் வாழ வழியின்றி நம்மவர் பிச்சை எடுக்கிறார்கள்.

எந்த வடக்கத்தியான் நம் நாட்டிற்கு வந்து ரிக்ஷா இழுக்கிறான்? கூலி வேலை செய்கிறான்? ரோட்டோரத்தில் கிடக்கிறான்? இங்கு வந்து கூலிக்காரனாக இருக்கிறான்? ஒருவனைக் காட்ட முடியுமா?

அந்த நாட்டில் போய் பாருங்கள் நம்மவர் படும் துயரை. டெல்லியின் இந்த பாரபட்சத்தைக் கண்டுதான் அவன் பிடியிலிருந்து விலக வேண்டுமென்கிறோம்.

பிரிந்தால் மற்ற நாட்டார் உங்களை மதிப்பார்களா என்று கேட்கிறார்கள், ஏன் மதிக்க மாட்டார்கள்?

மற்ற நாட்டார் மட்டும் உங்களை மதிக்கிறார்களா?

"உலகம் எங்கும் எங்கள் நேருவுக்குத்தான் செல்வாக்கிருக்கிறது. அவர் தலை அசைத்தால் உலகத் தலைவர்கள் ஆடுகிறார்கள். உலக சமாதானத்திற்கு அவரிடம்தான் ஆலோசனைகேட்கிறார்கள். மாசு மறுவற்றவர் என்றெல்லாம் புகழப்படும் நேருவின் இந்தியாவை மற்ற நாட்டார்கள் மதித்தார்களா, இந்திய பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு என்ன அவமானம் நடந்தது தெரியுமா?

இந்தியாவைவிட சின்ன ஊரான கோவாவிற்கு இந்தியப் பாராளு மன்ற உறுப்பினர்கள் செல்ல சென்றபோது. "உள்ளே நுழைந்தால் காலை முறிப்பேன்" என்று அந்த நாட்டவர்கள் கூறினார்களே, பெரிய தேசமாகிய இந்தியா என்ன செய்தது? அந்த உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட அவமானம் இந்தியாவை அவமதித்ததாகாதா? இதற்கு உலக சமாதான வீரர் நேரு என்ன செய்தார்.

மற்றும் நம்மை "உங்களுக்கு எல்லை எது?" என்று கேட்கிறார்கள். சுதந்திரம் அடைவதற்கு முன்பே நீங்கள் எல்லையை வடித்து விட்டீர்களா? இந்தியாவின் எல்லைகளையெல்லாம் சீன நாட்டுக்காரன் தனக்கு சொந்தமென்றுகூறி எல்லை போடுகிறானே, இன்னும் உனது எல்லை எது என்று உனக்குப் புரியவில்லையே. எங்கள் எல்லைக்குச் சரித்திரமே இருக்கிறதே அது புரியாது கேட்கிறாயே!

உங்கள் திராவிட நாட்டுக்கு ஆதாரம் உண்டா என்கிறாய் உண்டே உனது தேசிய கீதமாகிய "ஜனகணமன"விலிருக்கிறதே அது போதாதென்றால் H. G. வெல்ஸ் எழுதிய உலக சரித்திரம் என்ற புத்தகத்தைப் பாரேன். திராவிட நாகரீகம் எழுதியிருக்கிறாரே, அது வெள்ளைக்காரன் எழுதியதென்றால். M. S சுப்பிரமணிய ஐயர், திரு வேங்கிடச்சாரியார் எழுதிய திராவிட வரலாற்றைப் பாரேன். அது பார்ப்பனர்கள் எழுதிய தென்றால் மறைமலை அடிகள், சுந்தரம் பிள்ளை, பொன்னம்பலம் பிள்ளை முதலியவர்கள் எழுதிய புத்தகங்களைப் பாரேன். அதுவும் எங்களுக்கு போதாது. அவர்கள் எல்லாம் தமிழர்கள் என்று மறுப்பாயானால் வடநாட்டுக்காரரான முக்கர்ஜி, டட் என்பவர்கள் எழுதிய புத்தகத்தில் திராவிடர்திராவிட நாகரீகம் இவைகள் எழுதியிருக்கிறாரே, அதைப் பாரேன். அவர் வடவர் அதை நம்பமாட்டேன் என்றால் 1937-ம் ஆண்டு திரு. ஆச்சாரியார் மந்திரி சபையில் பாராளு மன்ற காரியதரிசியாக இருந்த வர்க்கி எழுதியிருக்கிறாரே அதைப் பாரேன்! எங்கள் நாட்டுக்கு ஆதாரம்! அதுவும் ஒப்புக்கொள்ளமாட்டாயென்றால் கேரளத்தில் கம்யூனிஸ்ட் சர்க்காரில் மந்திரியாக இருந்த முண்டச்சேரி ஒரு புத்தகம் எழுதி இருக்கிறாரே அதில் திராவிடம்—திராவிடர் என்பதுபற்றி—அதுவும் ஒப்புக்கொள்ளமாட்டோம் என்றால் சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி திரு. P. V. ராஜமன்னார் ஒரு புத்தகத்திற்கு மதிப்புரை எழுதும்போது, "திராவிடப்பண்பாடு, தென்னாட்டுப் பண்பாடு" என்று எழுதியிருக்கிறாரே அதைப் பாரேன்! இதற்குமேல் உனக்கென்ன ஆதாரம் வேண்டும்! இத்தனை பெரியவர்கள் கூறியதற்குமேல் ஆதாரம் வேண்டுமா? அப்படியானால் உனக்கு புரிந்து கொள்ளும் சக்தியில்லை என்றுதானே பொருள்!

நீதிபதி ராஜமன்னார் கூறியிருக்கிறார் என்றால் சென்னை உயர் நீதி மன்றம், "திராவிட நாடு என்று ஒன்று இருந்தது, அது நாகரீகத்தோடு வாழ்ந்தது என்று தீர்ப்புக் கொடுத்ததாகத் தானே பொருள்! அதை அவமதித்தால் நீதிபதியை — நீதி மன்றத்தை அவமதித்த குற்றம் தானே கிடைக்க வேண்டும்!

மக்கள் கம்பனைப் பற்றி பேசும்போது, "கம்பனின் கட்டுத்தறியும் கவிபாடும்" என்று! அண்ணா சட்ட சபையில் பேசினார்—பேசுகிறார். அவர் எதிரில் உட்கார்ந்திருந்த காரணத்தாலேயே இன்று காமராசர் பேசும் திறமைபெற்றார். அண்ணாவின் சக்தியை இதிலிருந்து தெரிந்து கொள்!

மக்கள் விழித்துக் கொண்டார்கள். அதனாலேயேவளர்கிறோம்" என்று பேசி முடித்தார்!

காமராஜர் காட்டும் பூகோளம்!

★

"நான் சரித்திரத்தையும், பூகோளத்தையும் பூகோளத்தையும் படித்ததினால் திராவிட நாடு கேட்கிறேன்! காமராஜர் நல்ல வேளையாக இதையெல்லாம் படிக்கவில்லை" என்று ஒரு கூட்டத்தில் சொன்னேன்! காமராஜர் இதற்கு பதில் தரும் வகையில் ஒரு கூட்டத்தில் பேசினாராம்! "நான் பூகோளம் படித்ததாக எங்கும் சொல்லவில்லையே? என்ன பூகோளம்! நீங்கள் ஏட்டிலே எழுதி இருப்பதை படித்திருப்பீர்கள்! நான் பூகோளகத்தை நேராக பார்த்திருக்கிறேன்" என்று கூறினாராம்!

தூத்துக்குடியையும், பாளையங்கோட்டையையும், பண்ணுருட்டியையும் நேரில் சென்று பார்த்து விடலாம்! பாரீஸ் பட்டணத்தையோ, லெனின் கிராடு நகரத்தையோ சுலபமாக நேரில் பார்க்க முடியாது! நேரில் பார்த்தவர்கள் எழுதியதை படித்துத் தான் தெரிந்து கொள்ள முடியும்! ஆனல், காமராஜரோ பாளையங்கோட்டையையும், பண்ணுருட்டியையும் தான் பூகோளம் என்று கருதுகிறார் போலும்!

(அறிஞர் அண்ணா)

கண்காட்சியை ஒரு கட்சிக்குச் சொந்தமாக்காதீர்! அப்படிச் செய்தால் இப்படித் தான் நடக்கும்!

(அண்ணா பேச்சு)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கண்காட்சியை பார்த்த பின் தான். நகரில் பல கண்காட்சிகள் தொடங்கப்பட்டது. இடையில் இக்கண்காட்சிக்கு ஆதரவு சிறிது குறைந்திருந்தாலும் அவர்கள் தொடர்ந்து நடத்தி மக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டி வந்தார்கள்.

மக்கள் பொழுதுபோக்குவதற்கும், மகிழ்ச்சியாக இருப்பதற்கும் இம்மாதிரி கண்காட்சிகள் மிகவும் அவசியம். இன்று நீங்கள் பெருவாரியாக வந்திருக்கிறீர்கள்! இது போன்று என்றும் நீங்கள் ஆதரவு தந்து ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று இங்குபலபோட்டிகள் நடைபெற்றதைப் பார்த்தோம். அதில் பலர் கலந்து வெற்றி பெற்றதையும் கண்டோம். இது மட்டும் போதாது. இன்னும் அதிகமானவர் போட்டிகளில் கலந்து, வெற்றி பெறவேண்டும்!

இன்று நம்முன் வாள் போர், மல்யுத்தம், சிலம்பு விளையாட்டு இவைகள் நடத்தி காண்பித்தார்கள்! இதுபோன்று நம்முடைய நாட்டை நமதரசர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் இம்மாதிரி வீர விளையாட்டுகளைச் செய்து தரணிக்கெல்லாம் நமது வீரத்தையும், புகழையும் எடுத்துக் காட்டி வந்தார்கள்! ஆனால் அரசிழந்து, நாம் நமது வலிவிழந்து அடிமைகளாய், வாழ்கின்ற இந்த நிலையில் அதையெல்லாம் மறந்தோம்! நமது புகழும் மறைந்தது! அதை மீண்டும் நினைவுப் படுத்தும் முறையில் தான் இக்கண்காட்சியினர் இவ்விளையாட்டுகளை இங்கு நடத்தி இருக்கின்றனர்! நாம் இதை தொடர்ந்து நடத்த வேண்டும். கண்காட்சிகள் நடத்துவது மக்களின் மகிழ்ச்சிக்கும் பொழுதுபோக்கிற்கும் உகந்ததாகவே நடத்த வேண்டும்! இதை வேறு நோக்கங் கொண்டு நடத்தக் கூடாது! அப்படி நடத்துவது நல்லதல்ல—

இதை மனதில் கொண்டே தான் சின்னாட்களுக்கு முன்னர் இதே கண்காட்சியில் ஒரு பெரியவர் பேசும்போது, "மக்களின் மனமகிழ்ச்சிக்கும் பொழுதுபோக்கிற்கும் நடத்துகின்ற கண்காட்சிகளை அரசியல்நோக்கோடு நடத்தக்கூடாது! அந்தக் கண்காட்சியை அரசியல் கட்சிகள் தங்களுக்கு சொந்த படமாக்கிக் கொள்ளக்கூடாது! எல்லா மக்களும், எல்லாக் காட்சியினரும் கண்டு களிக்கும் படியாகசெய்ய வேண்டும்"

என்று பேசினார்! இதையே நானும் வலியுறுத்துகிறேன்!

ஒரு அரசியல் கட்சியார் ஒரு கண் காட்சியை தங்களுக்கு சொந்தமாக்கினால், இன்னொரு அரசியல் கட்சியார் தங்களுக்கென ஒரு கண்காட்சியை நடத்துவார்கள்! இந்த மனப்பான்மையை வளரவிடக்கூடாது! மக்கள் கண்டு களித்துசிறிது நேரம் பொழுது போக்க வருகின்ற ஒரு இடத்தில், அரசியலை புகுத்துவதைக் கண்டு நான் வருந்துகிறேன்! இனியேனும் அம்மாதிரி நடந்து கொள்ளாமலிருக்கவிரும்புகிறேன். இவ்வளவு சிறப்பாகவும், இவ்வளவு நல்ல முறையிலும் நடத்திய தென்னிந்திய விளையாட்டு கழகத்தினரையும் எனதருமை நண்பர்மோகனையும் பாராட்டுகிறேன்! நீங்களெல்லாம் இவ்வளவு பெருவாரியாக வந்து, ஆதரவு தந்தமைக்கு மீண்டும் உங்கட்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்! இந்த ஆதரவை தொடர்ந்து நீங்கள் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

பின் காட்சி நிர்வாகி திரு மோகன் அவர்கள் "அண்ணா வாழ்க" என்ற மின் விளக்கை அண்ணாவுக்கு பரிசளித்தார்!

போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றவர்களும், மற்றும் பலரும் அண்ணா அவர்களுக்குமலர்மாலைகள் சூட்டினார்கள்.

கண்காட்சி கண்ட்ராக்டர் திரு மோகன் அவர்கள் நன்றி கூற விழா இனிது முடிந்தது.

மக்களின் அன்பைப் பெற்ற தலைவர்களை கொண்டு இவ்விழாவை சிறப்பாக நடத்தியதற்காக கண்காட்சி நிர்வாகிகளையும் திரு மோகன் அவர்களையும் மக்கள் பாராட்டி புகழ்ந்துச் சென்றனர்.

விடுமுறைகளிலும் வடக்கு-தெற்கு பேதமா?

மத்திய சர்க்கார் சம்பள கமிஷன் அறிக்கைப்படி மத்திய சர்க்கார் ஊழியர்களின் விடுமுறை நாட்களை இருபத்தி மூன்றிலிருந்து பதினாறாகக் குறைத்துவிட்டு ஜனவரி மாதம்முதல் அமுல் செய்திருக்கிறார்கள் இந்திய சர்க்கார்.

மேலை நாடுகளில் ஜனநாயக நாடாக இருந்தாலும், ஜனநாயகத்தின் போர்வையில் சர்வாதிகார நாடாக இருந்தாலும் சரி வேலை நேரத்தைக்குறைத்து "மனிதன் தேவையை"ப் பூர்த்தி செய்வது தான் தன் தலையாய, கடமையாகக் கொண்டு பல அரசுகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற இந்த இருபதாம் நூற்றாண்டிலே தான், இந்திய உபகண்டத்தை "குடியரசு" என்ற பெயரில் அதிகார பீடத்திலே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சி, குடியரசு என்ற பொருள் நிறைந்த சொல்லையே மறந்து இந்நாட்டு முடிசூடா மன்னர்களின் உழைப்பை அதிகமாக்கி "கொடுப்பதோ 12 மாத சம்பளம் வாங்கப்படுவதோ 13 மாத வேலை" என்ற விசித்திரமான போக்கை இந்திய உபகண்டத்தில் தவிர வேறு எங்கு காண முடியும்?

பல ஐந்தாண்டு திட்டங்கள் போட்டு பணத்தை பல நாடுகளிலிருந்து கடனாகப் பெற்று, திட்டங்களை நிறைவேற்றுகின்றப்பொறுப்பை சுயநல சுறாமீன்களிடப் கொடுத்து, திட்டம் நிறைவேற்றப்படாததையும், அப்படி திட்டம் நிறைவேறினாலும் அதில் நஞ்சு கலந்திருப்பதையும் கண்டு, செய்வதறியாமல்வாய் பிளக்கின்ற கோமாளித்தனத்தை இந்த உபகண்டத்தில் தவிர வேறு எங்கே இந்த விசித்திரமான நிகழ்ச்சிகளைக் காண முடியும்?

இந்த சீர்கெட்ட வேலையில்தான் காங்கிரஸ் சர்க்கார் மனித உரிமையைப் பறிக்கும் நிலையிலே நேரத்தை அதிகப் படுத்தியதோடு விடுமுறைகளையும் குறைத்து "தமிழர் திருநாளாம்" பொங்கல் பண்டிகைக்கு ஒரே ஒரு நாள் விடுமுறை அளித்திருக்கிறது. ஐயகோ! என்ன கொடுமை! தமிழ் நாட்டுக்குத் தேவையற்ற வடநாட்டுப் பண்டிகைகளும் சமூகத்தை அழிக்கும் வைதீக கோட்பாடுகளுமே அதிகமான விடுமுறைகளை விழுங்கி விடுவதா? தன்மான தமிழன் தன் உயிரென மதித்து கொண்டாடும் "தமிழர் திருநாளாம்" பொங்கல் பண்டிகை வடவரால் புறக்கணிக்கப் படுவதா?

விடுமுறைகளிலும் வடக்கு—தெற்கு பேதமா? தமிழ் நாட்டு மத்திய அரசு ஊழியர்களே உங்கள் தன் மானம் பறிக்கப்பட்டதே!

என்ன செய்யப் போகிறீர்கள்?

மு. பாலகிருஷ்ணன்,
தபால் தந்தி இலாகா,
சென்னை.

பயம் வேறு! பக்தி வேறு!!

"சமுதாய நலத்திட்டத்தின் மூலமாக நீங்கள் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டும் என்று கருதுகின்ற காரியங்களை எதிர்பார்த்து ஆளும் கட்சியாக இருந்துகொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற உங்களுக்கு மக்கள் காட்டுகின்ற பயத்தை, 'நீங்கள், 'பக்தி' என்று நம்பிக் கொண்டிருக்கிறீர்கள்!

"மக்களை உங்களை நம்பி வாழ வேண்டியிருப்பதின் காரணமாக, அளித்த ஓட்டுக்களையெல்லாம் உங்களுடைய உண்மையான பலம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்! இவ்விதம் எல்லா விதத்திலும் நீங்கள் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்! மக்களுடைய உள்ளங்கள் எல்லாம்—எண்ணங்கள் எல்லாம் எந்த நிலையில் இருக்கின்றன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள முயலவேண்டும்!"

—அறிஞர் அண்ணா.

நேற்று முளைத்த காளான் ஆலமரத்தின் விழுதை தாங்கிக் கொள்ளுமா?

(கண்ணதாசன் பேச்சு)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு மாநில அமைச்சர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார்! இடமறிந்து, இலக்கியம் பற்றி பேசியிருந்தால் அவரை பாராட்டியிருக்கலாம்!

"கர்நாடகத்தில் தி. மு. க. இல்லை! அங்கே அந்தக் கழகம் வளரவில்லை" என்று பேசினராம்!

எங்கே பேசினாலும் நம் நினைவு அவர்களுக்கு வந்து விடுகிறது. 'திராவிடமுன்னேற்றக்கழகமா-பூ என்று ஊதி விடுவேன், அண்ணாத்துரை ஐந்தடி உயரம் இருக்கிறான், நாடகம் சினிமா எழுதுகிற இவர்களுக்கு திராவிட நாடு கிடைக்குமா' என்று கேலி பேசிய இவர்களும் சினிமாவில் இருக்கிறார்கள்!

நண்பர் அரசு உட்பட நாற்பத்தைந்து உறுப்பினர் கார்ப்பரேஷன் தேர்தலில் வெற்றி பெற்றோம்,

அப்போது நமது தோழர்கள் இராப் பகலாக உட்கார்ந்து கொண்டு, சாப்பிடக் கூடப் போகாமல் வெற்றிச் செய்தியை கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாம் வெற்றி பெற்றதைப் பற்றி 'பம்பாய் டைம்ஸ்' என்னும் பத்திரிகை—

"கணிசமான அளவில் திராவிட முன்னேற்றக் கழகம் மெஜாரட்டி பெற்றிருப்பது 'அபாய அறிகுறி' என்று எழுதியது.

பொதுத் தேர்தலில் சட்டமன்றத்திற்கு பதினைந்து பேரும், பாராளு மன்றத்திற்கு இரண்டு பேரும் செல்வதற்காக வெற்றி பெற்றோமே, அது என்ன அறிகுறி?

தலைநகர் பிடிபட்டதே அது என்ன அறிகுறி! மேயர் பதவியைப் பெற வேண்டுமென்ற ஆசை நமக்கு இல்லை! மெயில் பத்திரிகை துணை தலையங்கம் ஒன்று எழுதியது, அதில் திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலிருந்து நழுவப் பார்க்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது!

நாம் பொறுப்பிலே இருந்து நழுவி விடுபவர்கள் அல்ல என்பதை அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறினர்.

மேயர் பதவிக்காக காங்கிரஸ் குறுக்கே பாய்ந்து ராஜமன்னாரைப் பிடித்து, காங்கிரசை ஆதரியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். ஒரு உறுப்பினருக்கு தலைவரான நண்பர் ம. பொ. சி. அவரிடத்திலே உள்ள ஒரு உறுப்பினரை ஆதரிக்க வைத்தார்! எப்படியெப்படியோ சூழ்ச்சி செய்தார்கள். நண்பர் அரசு மேயரானார்!

மறுநாள் பம்பாய் பத்திரிகை ஒன்று—

சென்னையில் தி. மு. க. மேயர் என்று எழுதியது. இன்னொரு பத்திரிகை காங்கிரஸ் நட்சத்திரம் எரிந்து விழுந்தது என்று எழுதியது!

சென்னையில் காங்கிரஸ்தோற்றுப் போனதற்கு காரணம் என்ன என்று இந்திரா காந்தியை அழைத்து மூன்று நாள் ஆராய்ச்சி செய்தார்கள், குழப்பமான நிலையில், ஜெயித்தது எப்படி வித்தையாலா மந்திரத்தாலா என்று கூட ஆராய்ச்சி செய்தார்கள்.

பணமுள்ளவன், புத்தி இல்லாதவனாக இருந்தால் கூட வெற்றி பெறமுடியும்!

பணக்காரர்கள் ஓட்டுப் போடவில்லை. அவர்கள் போட்டிருந்தால் வெற்றி பெற்றிருப்போம் என்று காமராசர் கூறினர்!

இவர்கள் கூறுகிறார்கள் ராஜாஜியின் கட்சி, பணக்காரர் கட்சி என்று! கடைசியில் ஒரு தீர்மானம் போட்டார்கள்.

தேர்தலில் நிற்க வைத்த புதிய காங்கிரஸ்காரர்களுக்கு ஓட்டு வாங்கத் தெரியவில்லை, என்று முடிவு கண்டார்கள்!

நாம் பணமில்லாமலேயே வெற்றி பெற்றோம் ஐநூறு ரூபாயை செலவழித்து ஆசைத்தம்பி வெற்றி பெற்றார். அப்பாதுரையார் திருவல்லிக்கேணியில் எந்தவித வசதியுமின்றி 11,200 ஓட்டுகள் வாங்கினர். பணவசதி படைத்த காங்கிரஸ் உறுப்பினர் 11,600 ஓட்டுகள் தான் பெற்றார்! எவருடைய செல்வாக்கை நம்புவது?

நகரமன்ற தேர்தலில் ஈடுபடப் போவதற்கு முன் 1957 வருடம் ஜுன் மாதம் 24-ந் தேதி பத்திரிகையில் எழுதினேன், சென்னையில் நாம் 45 உறுப்பினர்கள் வெற்றி பெறுவோம் என்று.

சட்டமன்றத் தேர்தலில் ஆசைத்தம்பி வெற்றி பெற்றார், அப்பாதுரை வெற்றி பெறும் வாய்ப்பை குறைந்த வாக்குகளில் இழந்தார், ஆயிரமயிரமாக செலவழித்த எச். டி. ராஜா 10,400 ஓட்டுகள் தான் பெற்றார். உதய சூரியன் சின்னத்தை வைத்து மட்டுமே அப்பாதுரையார் 11,400 ஓட்டுகள் பெற்றார். 200 ஓட்டு வித்தியாசத்தில் ஜீவரத்தினம் தோற்றார்.

45 பேர் வருவார்கள் என்று எழுதினேன்! நான் சொன்னது போலவே அப்படி நின்று விட்டது! எனக்கு ஒரு சபலம் தட்டியது 51 வந்திருக்கக் கூடாதா என்று!

சென்னை மக்களை எந்த ஜால வித்தைக் காட்டி வெற்றி பெற்றோம்? நமது இயக்கம் மக்களின் இதயத்தோடு இதயம் பேசுகின்ற இயக்கம்!

சென்னைக்கு நேரு வந்தபோது கறுப்புக் கொடி காட்டியபோது நம்மை ஓட ஓட அடித்தார்கள்.

நேரு விமான நிலையத்தில் இறங்கியபோது 50 பேர் காங்கிரஸ் கொடியைக் காட்டி வரவேற்றார்கள். வரவேற்பு தொடர்ந்து இருக்கும் என்று நினைத்துக்கொண்டு, அலங்கரிக்கப்பட்ட காரில் கரங்களை கூப்பியவண்ணம் வந்தார். ஐம்பது பேரைத் தாண்டியதுதான், நமது தோழர்கள் கறுப்புக் கொடி காட்டினர். விமான நிலையத்திலே இருந்து ராஜாஜி மண்டபம் வரை கறுப்புக் கொடி! கறுப்புத் துண்டுகளை புறாவின் கால்களில் கட்டி பறக்கவிட்டார்கள், குழாய்களில் நிரப்பி ஊதினார்கள்.

இதைக் கண்ட நேரு ஒரு வார்த்தையும் பேசாமல் திட்டத்தை மாற்றிக் கொண்டு வேறு வழியில் சென்றுவிட்டார். அதற்குப் பிறகு அப்படிப்பட்ட நிகழ்ச்சி ஒன்றும் நடைபெறவில்லை!

அவருக்கு புரிந்தது. அவர் புரிந்து கொண்ட அளவுக்கு மற்றவர்கள் புரிந்து கொள்ளவில்லை! இங்கே இருக்கிற சில ஏழெட்டு பேர் நம்மை கதை எழுதுகிறவர்கள், பாட்டு எழுதுகிறவர்கள் — சினிமாவிலே இருப்பவர்கள், நாடகமாடிகள் நாடாள்வதா என்றார்கள். ஆளுக்கொரு பத்திரிகை நடத்துகிறார்கள் என்றெல்லாம் தூற்றினார்கள்! தேர்தலில் நிற்க முடியுமா என்று பேசினார்கள்.

தேர்தலில் நின்றோம், வென்றோம், உள்ளே சென்றோம்! என்ன சாதிக்க முடியும் என்றார்கள். சாதித்துக் காட்டியிருக்கிறோம்!

காமராசர் கூறுகிறார், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் சுதந்திரா கட்சியில் விழுந்து விடுவார்கள் என்று, நேற்று முளைத்த சுதந்திரா கட்சியின் தலைவரான ராஜாஜி, தொண்டர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தை தாக்கிப் பேசாதே என்று கூறியிருக்கிறார்!

நேற்று முளைத்த காளான் ஆல மரத்தின் விழுதை தாங்கிக் கொள்ளுமென்று நினைக்கிறார்கள்! நேற்று வந்த சுதந்திரா கட்சியோடு, தி. மு. க. சேர்ந்து விடுமா?

ஒரு கூட்டத்தில், நிதி அமைச்சர் சுப்ரமண்யம் பதில் சொன்னால் அண்ணாத்துரை தாங்கிக் கொள்வாரா என்று காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள்!

ஒழுங்கு பிரச்னை எடுத்து வந்தபோது அறிஞர் அண்ணா ஆங்கிலத்தில் பேசும்போது நிதி அமைச்சர் அங்கே மறுத்துப் பேசாது கும்மரட்டாம்பட்டியில் போய் பேசியிருக்கிறார்!

காட்டில் புலியைக் கண்டு அஞ்சாமல் போரிடுகிறவன் தான் வீரன்! காட்டிலே இருக்கிற புலிக்கு ரோட்டிலே வந்து சவால் விடுபவனை வீரன் என்று அழைக்க முடியும்?

காங்கிரஸ்காரன் எவ்வளவோ திட்டுகிறான், அண்ணா அதற்கெல்லாம் இதுவரை திட்டிப் பேசியதுண்டா?

சேலத்தில் இரும்பு கிடைக்கிறது என்று சொல்லுகிறோம் என்பதற்காக காமராசர், சேலத்தில் இரும்பு என்ன தண்டவாளமாகவா இருக்கிறது என்று கூறியிருக்கிறார்!

தங்கம் கிடைக்கிறது என்றால் வெட்டியெடுக்கிறபோது கட்டியாகவா இருக்கிறது? வயலில் சோறு வெந்தே வருகிறதா என்பதுபோல் கேட்கிறார்.

இரும்பு தண்டவாளமாகவா கிடைக்கும்? பிரதம மந்திரிகளே இப்படி என்றால் மற்ற மந்திரிகள் எப்படி இருப்பார்கள்?

கேரள, கன்னட, ஆந்திர மந்திரிகளை பார்த்து வடக்கே பயப்படுகிறார்கள். அகில இந்திய காங்கிரஸில் ராஜ்ய மந்திரிகளிலேயே நல்ல மந்திரியாக காமராசரை தேர்ந்தெடுத்தார்கள்.

சிறந்த மந்திரி என்று காமராசரை ஏன் தேர்ந்தெடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை சமாளிக்கிறார் என்று.

அவர்கள் ஒரு கணக்குப் போட்டுப் பார்க்கிறார்கள். ராஜாஜி, குமாரசாமி ராஜா, ஓமந்தூரார் இவர்களாலேயே சமாளிக்க முடியவில்லை! காமராசர் பெரியாரை வைத்துக் கொண்டு தான் நம்மை திட்ட வேண்டி இருக்கிறது.

பெரியார் வீடு கட்டுவதற்கு ஒரு லட்சம் தேவை என்றதும், ஒவ்வொரு ஊரிலே இருந்து காங்கிரஸ்காரர்கள் பணம் திரட்டி அனுப்புகிறார்கள்.

நாம் இங்கே பேசுகிற போது ராஜா சர் முத்தையா செட்டியாரை டாட்டாவிலிருந்து பிர்லா வரை பணக்காரர்கள் நிலையைப் பற்றி பேசுகிறோம்!

பாராளுமன்றத்தில் இரண்டு உறுப்பினர்களாக இருந்தாலும் திராவிடத்தின் நிலைபற்றி பேசுகிறார்கள்

நகராட்சி மன்றத்திலே உறுப்பினர்களாக போனதால்பெருச்சாளி கணக்கிலே இருந்து நாய அடிக்கும் கணக்கு வரைப் பேசுகிறார்கள்!

சிதம்பரத்தில்காமராசர்பேசும் போது படித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப் போடுகிறார்கள் படிக்காதவர்கள் காங்கிரஸ் பக்கம்என்று கூறினர்,

தி.மு.கவை திட்ட வேண்டுமென்பதற்காக பணம் கொடுக்கிறார் அளகேசர்,

அவர் கண்ணியமான மனிதரல்ல, எப்படி மந்திரியானார் என்பதே விந்தை!

(15-ம் பக்கம் பார்க்க)

ஆளுந்திறனற்றவர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்கிறார்கள்!

[கண்ணதாசன் பேச்சு]

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு தத்துவ ரீதியிலே பதில் சொல்ல முடியவில்லை!

பசியென்றால் காலணாவுக்கு இட்டிலி வாங்கித்தின்ற காலமல்ல இது!

சுதந்திரம் வந்தால் இப்போது இருக்கிற விலையை விட குறையும் என்றார்கள்! விலையேறி இருக்கிறதே தவிர குறையவில்லை!

சண்டை காலத்தில் படி அரிசி ஆறரை அணா விற்றது. இன்று விலை ஒரு ரூபாய் ஒரு அணா விற்கிறது!

புளி, மிளகாய் விலை அப்போது இருந்ததை விட மூன்று மடங்கு ஏறியிருக்கிறது!

அமைச்சர் பக்தவச்சலம் லயோலா கல்லூரியில் பேசும்போது உணவுப் பண்டங்களின் விலை ஏன் ஏறுகிறது? நீங்களே சொல்லுங்கள். என்றாராம்!

மாணவர்களிடத்திலே போய் விலை ஏற்றத்திற்கு என்ன காரணம் என்று கேடகும் மந்திரியும் ஒரு மந்திரியா?

உணவு விலை ஏற்றத்திற்கு காரணம் உணவுப் பண்டங்களை பதுக்கி வைத்துக் கொண்டிருப்பதால் தான்! பதுக்கி வைப்பவர்கள் யார் யார் என்று கண்டு பிடித்தால் பெரும்பாலும் காங்கிரஸ் எம்,எல்,ஏக்களாக இருப்பார்கள்!

ஒரு எம், எல், ஏ சட்டசபை தூண்களை தடவிப் பார்க்கிறார்! எனக்குத் தெரிந்த வரையில் நான்கு எம்.எல்.ஏக்கள் ரயிலையே இப்போது தான் பார்த்தார்கள்.

போலீஸ் யுவராஜ் மோப்பம் கண்டு பிடித்து குற்றவாளிகளை கண்டு பிடிப்பது போல காமராசர் கண்டு பிடித்துஅவர்களுக்கு 'போலோ மகாத்மா காந்திக்கு ஜே' என்றுசொல்லநாலுதடவை ரிஹார்சல், கொடுத்து அவர்களை ஒரு லட்சம் ஒன்றரை லட்சம் செலவழிக்க வைக்கிறார்!

ஏழுரை லட்சம் செலவுசெய்து முத்தையா செட்டியார் வருவது ஏன்? உள்ளே வந்தால் பதினைந்து லட்சம் சம்பாதிக்கலாம் என்று. ஆதாயமில்லாதசெட்டி ஆற்றில் இறங்கமாட்டான் என்பது போல் ஏதோ பர்மிட் லைசென்ஸ் கிடைக்கும் என்று தான் வருகிறார்கள். ஒரு படத்தில் பார்த்தேன் பதுக்கல் மூட்டைக்கு மேல் அசோக சக்கர கொடியை போட்டு மறைத்து வைத்திருப்பதை!

வெள்ளைக்காரனை பறங்கிக்காரன், வெள்ளை கொக்கு என்றெல்லாம் திட்டினார்கள். அவன் இந்த நாட்டை விட்டுச் சென்றான்! அரையணா விற்ற இட்டிலி ஒரு அணா ஆயிற்று! விலை ஏறிற்றே தவிர இறங்கவில்லை!

பாண்டிச்சேரியில் பிரஞ்சுக்காரன் இருந்தபோது சாப்பாடு நான்கு அணாவாக இருந்தது. பிரஞ்சுக்காரன் அப்படிப் போனான்—காங்கிரஸ்காரன் உள்ளே நுழைந்தான். நான்கு அணாவாக இருந்த சாப்பாடு எட்டணாவாயிற்று!

பிரெஞ்சுக்காரன் இங்கே இருப்பதா? பழைய மந்திரி சபையில் லஞ்ச ஊழல் குற்றத்திற்காளான குபேருக்கு ஒரு காந்தி-குல்லாயை போட்டு காங்கிரஸ்காரனாக்கினார்கள்.

பிரெஞ்சுக்காரன் போனான், காங்கிரஸ்காரன் நுழைந்தான். கூடவே தரித்திரமும் நுழைந்தது!

காங்கிரஸ்காரன்எங்கு காலடி எடுத்து வைக்கிறானோ, அந்த இடம் தேராது!

வெள்ளைக்காரன் காலத்திலே ஆயிரம் பிச்சைக்காரர்கள்இருந்தார்கள் என்றால் காங்கிரஸ்காரன் ஆட்சியிலே பனனிரெண்டாயிரம் பிச்சைக்காரர்கள்இருக்கிறார்கள்.

நேரு சென்னைக்குவந்தபோது பன்னிரெண்டாயிரம் பிச்சைக்காரர்களை குன்னத்தூரிலே போய் விட்டு விட்டார்கள்.

இந்த நாட்டிலே உள்ளவர்களுக்கு சோறுபோட வக்கிலலை ஆனால் இந்தியா வளர்ந்து விட்டது என்றுபெருமிதமடைகிறார்கள்!

அமெரிக்காவில் உருளைக்கிழங்கு அளவுக்கு மீறி பயிராகி விட்டதாம்! ஒரு வருடத்தில் விளைந்த உருளைக் கிழங்குகளை கடலிலே தள்ளினான்! மீதம் இருப்பதை உருளைக்கிழங்கு 'சிப்ஸ்' போட்டு அதை விடுதிகளுக்கு இலவசமாக அனுப்புவதற்கு கப்பலேற்றினான்!

அந்தஉருளைக்கிழங்கு 'சிப்சை, வாங்குவதற்கு முதலில் போனது அசோக சக்கரம் போட்ட இந்தியாவின் கப்பல் தான்!

அங்கே சென்றபோது அணு சக்தி மின்சார நிலையத்திற்கு நேரு சென்றார். அந்த காட்சியை பார்க்கிறபோது கொசு போகிறது போல தெரிகிறது! அணு சக்தி உலை தூண்கள் பன்னிரெண்டு பேர் கட்டிப் பிடிக்க முடியாத அளவுக்குஇருக்கிறது!

அங்கே இருப்பவர்கள் இங்கே வந்தால் டிலலியைக் காட்டி, பழைய கோயில்களைக் காட்டி கிராமத்து ஜனங்களை காட்டி அனுப்பி விடுகிறார்.

சீனாக்காரன் இந்திய எல்லையிலேஇரண்டு ஆண்டுகளாக இருக்கிறான்! நாளுக்குநாள் முன்னேறி வருகிறான். பண்டிதர் ஒரு அடி கூட விடமாட்டோம் என்று கூறுகிறார்.

முன்பு டெல்லிக்கு வந்த குருஷேவ் பேசும்போது 500ஆண்டுகட்கு முன் செத்தவன் உடல் பாது காக்கப்பட்டு இருந்தால் பிழைக்கவைக்க முடியும். அந்த அளவு விஞ்ஞானத்தில் முன்னேறி இருக்கிறோம் என்றார், நம் ராஜேந்திர சோழன் உடலை பாதுகாதது வைத்திருந்தால் பிழைத்து வைத்திருக்க முடியும். இந்த நாட்டில் இன்றைக்கு இருப்பவனுக்கு நாளை இருப்பானா என்று சொல்ல முடியாத நாடு! மனித வாழ்வுக்கு கியாரண்டி இல்லாத நாடு.

எதற்கெடுத்தாலும் வெளிநாட்டையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதறகெல்லாம் காரணம் ஆந்த நாட்டை ஆள்கின்ற மந்திரிகளிடத்திலே திறமை இல்லை! தந்தி கம்பி அறுத்தவனும், தபால் ஆபீசைகொளுத்தியவனும்தான் மந்திரிகளாக இருக்கிறார்கள்.

இலங்கையிலே தமிழர்கள் கொடுமைப் படுகிறார்கள். பன்னிரெண்டு பெண்களை சிங்கள வெறியர்கள் கற்பழித்தார்கள், சிறுவர்களைக் கொன்றார்கள். அங்கு நடைபெற்ற கிளர்ச்சியிலே 1700 பேர் தமிழர்கள் இறந்தார்கள்.

நேரு பாராளுமன்றத்தில்பேசுகிறபோது இலங்கைக் கலவரத்தில் இரண்டு பேர் செத்தார்கள் என்றார்! இதற்கு காரணமென்ன? நேரு வேறு, நாம் வேறு!

என்னை அடித்தால் என் தாய் அழுவாள்.நேருஏன்அழப்போகிறார்!

நேரு காமன்வெல்த் உறவை ஏன் கெடுத்துக் கொள்ளவேண்டும், என்று கூறுகிறார்!

ஈஜிப்டில் ஆயிரம் வெள்ளைக்காரர்களை அடைத்து வைத்து விட்டார்கள். அவர்களை மீட்பதற்காக நூறு விமானங்களை எகிப்தின் மீது பறக்க விட்டான்.

நாட்டு மக்களை காப்பாற்ற இந்த சர்க்காருக்கு வக்கில்லை வழி இல்லை.

நூற்றுக்கு 95 பங்கு அதிகாரம் வடக்கே இருக்கிறது. பத்திரிகை நடத்த வேண்டுமென்றால் டில்லியை கேட்கவேண்டும் பத்திரிகைக்காக காகிதம் வேண்டுமென்றால் கூட டெல்லிக்கு எழுதிப் போட வேண்டும்!

இங்கே இருக்கும் அதிகாரம் கக்கூஸ் திறப்பதற்கும்! கல் நாட்டு விழா செய்வதற்கும் தான்!

நூற்றுக்கு 85 கோடி ரூபாய் வரியாக வடக்கே செல்கிறது! இங்கே இருப்பது துண்டு பீடி வரியும், எச்சில் வரியும்!

மாசாண சர்க்காரில் இருக்கும் மந்திரியை விட மத்திய சர்ககாரில் வேலை பார்க்கும்ஊழியருககு மதிப்பு அதிகம்!

சென்னை சர்க்கார் கோயில் மாடு போல இருக்கிறது!

நம்மவர்கள்பர்மாவிலிருந்தும், சிங்கப்பூரிலிருந்தும், இலங்கையிலிருந்தும் விரட்டியடிக்கப் படுகிறார்கள், நம்மவர்கள் தென்னாட்டவர்கள்வாழவேண்டுமென்றால் நாட்டுப் பிரிவினையைத் தவிர மாற்றுப் பிரிவினை இருக்கிறதா?

அப்பனுக்கு இலங்கையிலே பிரஜா உரிமை! மகனுக்கு சென்னையிலே உரிமை!

இலங்கையிலே இருக்கும் தொண்டைமான் என்பவருக்கு அங்கே உரிமை! அவருடைய மருமகளுக்கு சென்னையிலே பிரஜா உரிமை!

90 லட்சம்பேர் ஜனத்தொகை கொண்ட இலங்கை சுதந்திர நாடாக இருக்கிறது! நாம்பிரிந்தால் ஆபத்து என்கிறார்கள்!

வடக்கிற்கு தான் ஆபத்து வரும். இங்கு என்றும் ஆபத்து இல்லை. ஏழுரை கோடி மக்கள் தொகை உள்ள திராவிடம் பிரிந்தால் வாழாதாம்!

இந்த சர்க்கார் உள்நாட்டிலே கடன் கேட்கிறது! வெளி நாடுகளிலே கடன்கேட்டு வாங்குகிறது? இவ்வளவும் எங்கு போகிறது? லஞ்சம் ஊழல்களிதான் பணம்போகிறது,

பக்ராநங்கல் அணைக்கட்டு உடைந்தபோது ஆறு பேர்மீது குற்றம் சாட்டினார்கள்!

இந்த சர்க்காரில் எதற்குத் தான் பாதுகாப்பு இருக்கிறது! சொந்த ஊசி செய்வதற்குகூட வக்கில்லை.

பெங்களூரில் ஏரோபிளேன் செய்கிறார்கள். எப்படி செய்கிறார்கள். வெளி நாட்டிலே இருந்து வந்த'பாகங்களை' ஆணி வைத்து அடித்து பூட்டுகிறார்கள்

கல்கத்தாவில் ஹிந்துஸ்தான் கார் செய்கிறார்கள்.

காரின் ஒரு பாகம் கெட்டுவிட்டால்,அதைக் கேட்டு எழுதினால் வெளி நாட்டிற்கு எழுதியிருக்கிறோம், வரவில்லை என்கிறார்கள்

இவாகள் ஆட்சியிலே வந்து விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்திருக்கிறதா? சோறுக்கு வழிசெய்தார்களா? பாதுகாப்பு இருக்கிறதா? இல்லை, அவர்களுக்கும் நமக்கும் உறவுதான் இருக்கிறதா?

நாம் திராவிட நாடு கேட்கிறோம். சிவஞானம் அதெல்லாம் முடியாது,தரமாட்டோம் என்று கூறுகிறார்! சிவஞானம் அவர்களிடத்திலே திராவிட நாடு கொடுக்கும் அதிகாரம் இருந்தால் கேட்க வேண்டியதில்லை! தலையிலே அடித்தால் வாயில் கக்குவார்!

நாம் கேட்கும் பிரிவினை தத்துவ ரீதியிலே அமைந்ததாகும். பதினைந்தாயிரம் ஆண்டு காலம் தனியாக அரசோச்சி ஆண்டு வந்த நாடு. எந்தத் தமிழ் மன்னனும் அடிமையாக வாழ்ந்ததில்லை.

வடமொழி, ஓம் என்னும் தத்துவத்தை வைத்து ஆரம்பிக்கப் பட்டது!

நமது மொழி, பிறப்பு தத்துவத்தை வைத்து துவங்கி இறப்பு தத்துவத்தை வைத்து முடிக்கப் பட்டது!

திராவிடம் என்று நாம் கூறுகிறோம். சிவஞானமோ தீராவிடம் என்கிறார். நேரு தன் மகள் இந்திராவுக்கு கடிதமெழுதும்போது திராவிடரின் நாகரிகத்தை, பண்பாட்டை தெரிந்து கொள் என்று எழுதினார்!

மொழியின் வளத்தை காப்பாற்றியவர் அண்ணா! தெளிந்த ராஜதந்திரமுடைய அறிஞர் அண்ணா எழுப்பும் தனி நாடு உரிமை போராட்டத்தில் அருமைத் தம்பிகளாகிய நீங்கள் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

சந்தனம் அரைப்பது மார்புக்கே தவிர இடத்திற்கு அல்ல!

மேயர் பெறுகின்ற புகழ் அவருக்கல்ல, கழகத்திற்குத் தான்!

(அண்ணா பேச்சு)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டுகிறார்கள் என்று கூட்டத்தில் சொல்லாதீர்கள்.

அவர்கள் திட்டும்போது வந்திருந்தவர்கள் எத்தனைபேர். இங்கு இருப்பது போலவா அங்கே கூடியிருந்தார்கள். அவர்கள் கூட்டத்தில் நானூறு, ஐநூறு பேர் இருந்தால் கடல் போல் கூட்டம் என்பார்கள். இங்கே பத்தாயி த்திற்கும் மேற்பட்டவர்கள் கூடியிருக்கிறீர்கள்.

இருநூறு, முன்னூறு பேர் கூடியிருந்த போது பேசியதற்காக, பத்தாயிரம் பேர் கூடியுள்ள இங்கு அவர்களைப் பற்றி பேசுவது தேவையற்றது, பொருத்தமற்றது! இது அவர்களுக்கு லாபம்!

நாம் சொல்லுகின்ற கருத்தை திருப்பித் திருப்பி சொல்லுகின்றோம், சந்தேகம் தீருகின்ற வரை பேசுகிறோம். மக்கள் ஆதாரம் கேட்கும் வரை சொல்லுவோம்! அதாவது ஒரு கூட்டத்தில் ஒரு பொருளை மட்டும் பேசுகிறோம். வேறு பொருள் பேசுவதற்கு நமக்குத் தெரியாது என்பதல்ல! பேசுவதற்கு நேரம் இல்லை.

மாற்றார் எப்படிப் பேசினாலும் நமது தோழர்கள் ஒரு துளி கூட பொருட்படுத்தக் கூடாது.

நம் கழகம், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்ற நாட்டுப் பிரிவினையை சொல்லி வருகிறது;

மற்ற கட்சிகள் இந்தியா ஒன்று என்று கூறுகின்றன!

இந்தியாவிலெ ஒரு அங்கமாக, பாகமாக ஏன் இருக்க வேண்டும், தனி அரசு ஏன் பெறக் கூடாது என்று நாம் கேட்கிறோம்.

இந்தியா ஒன்றல்ல—துணைக் கண்டம், இந்தியாவோடு நாம் சேர்ந்து வாழ்வதிலே நட்டமே தவிர, லாபமில்லை! பிரிந்து வந்தால் லாபம் என்கிறோம்.

ஒரு வீட்டில் குடியிருப்பவர் வீட்டைக் காலி செய்து விடுகிறேன் என்று வீட்டுக்காரனிடம் சொன்னால், வீட்டுக்காரர் கேட்பார், இந்த வீட்டில் இருப்பதால் உனக்கென்ன அசௌகர்யம்? என்று.

வாடகைக்கு இருப்பவர், 'சமையல் அறையில் புகைக் கூண்டு இல்லை. புகை வெளியே போக இடமில்லாததால் இருமல் வருகிறது!

படுக்கை அறையில் காற்றோட்டத்திற்கு ஜன்னல் இல்லை; முன்னாலே இருக்கிற வாயிற்படி மிகவும் மட்டம். புழக்கடைக்கு கதவு இல்லை, வீட்டுக் கதவுக்கு தாள் இல்லை!

நீ வேறு அடிக்கடி ஐந்து கொடு, பத்து கொடு என்கிறாய். ஆகவே போகிறேன் என்று கூறுவான்!

இத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த வீட்டுக்காரர் கொஞ்சம் ரோஷமுள்ளவராக இருந்தால் 'சரி போ' என்பார்.

அதைப்போல் இந்தியா என்னும் வீட்டிலே இருந்து போகிறோம் என்று கூறுகிறோம்!

அந்தவீட்டுக்காரன் போபோ என்கிறான்.

இந்த வீட்டுக்காரன் போகாதே இரு, இரு என்றால் என்ன பொருள்?

வாடகை குறைத்துக் கொடுத்தாலும் பரவாயில்லை என்ற வீட்டுக்காரர்களும் இருக்கிறார்கள், காலையில் சமையல் செய்கிற போது அந்த வீட்டுக்காரம்மா வந்து—

என்ன மீன் குழம்பா, இது என் பிள்ளைக்குப் பிடிக்கும் என்பாள். வறுவல் செய்தால் இது மருமகளுக்குப் பிடிக்குமே என்பாள், புதுமாதிரியான துணி எடுத்து வந்தால் அந்தக் கடைக்கு சிபாரிசு கடிதம் கொடுங்கள் என்று கேட்பாள். சீட்டு பிடிக்கிறோம் என்றால் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பாள். இப்படி ஏதேது செய்கிறோமோ அதை யெல்லாம் கேட்பதுண்டு.

இந்தியா என்னும் பெரிய வீட்டில் வாடகை கொடுப்பது போன்று வரிகளை கொடுத்து வந்தோம். இப்போது எதெது கிடைக்கிறதோ, அதையெல்லாம் கொடு என்கிறார்கள்!

நெய்வேலியில் நிலக்கரி இருக்கிறதா—கொடு!

சேலத்தில் 'இரும்பு இருக்கிறதா—கொடு! இப்படி தமிழ் நாட்டில் என்னென்ன கிடைக்கிறதோ, அதையெல்லாம் வடநாடு கேட்கிறது! இதுஉண்டா, இல்லையா என்று இந்தியாஒன்று என்று கூறுகிற காங்கிரஸ்காரர்கள் நெஞ்சில் கை வைத்து தெரிந்து கொள்ளட்டும்!

மேற்கு ஜெர்மனியிலேஇருந்து கில்சட் விஸ்கிஸ் என்பவர் என்னை பார்க்க வந்தார். அவர் ஜெர்மனியில் ஒரு மாதப் பத்திரிகையை நடத்தி வருகிறார்.

'உங்கள் கழகத்தைப் பற்றி எழுத வேண்டும், கழகத்தின் முக்கிய கொள்கை என்ன' என்று கேட்டார்.

நான் சொன்னேன்—'எங்கள் கொள்கையை கேட்பதற்கு முன்னால் உங்கள் நாட்டு நிலைமையை மறந்து விட்டு கேட்க வேண்டும்.

இன்று ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி என்றும், மேற்கு ஜெர்மனி என்றும் பிரிந்து, மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

ஜெர்மன் நாடு ஒரு காலமல்ல. பல காலமாக ஒரே நாடாக இருந்தது. ஒரே பரம்பரையாக, ஒரே இனமாக வாழ்ந்த நாடு! அப்படி வாழ்ந்த ஜெர்மன் யுத்தத்தில் ஈடுபட்டு தோல்வியுற்றது. அமெரிக்கா தன் ஆதிக்கத்தை மேற்கு ஜெர்மனியில் செலுத்துகிறது! ரஷ்யாவின் ஆதிக்கத்திற்கு கிழக்கு ஜெர்மனி ஆளாகி யிருக்கிறது!

உங்கள் பிரிவினை மாற்றான் ஏற்படுத்தியது. எங்கள் ஒற்றுமை மாற்றான் ஏற்படுத்தியது,

நாங்கள் இந்தியாவிலே இருந்து பிரிய வேண்டு மென்கிறோம்: எங்கள் விருப்பத்திற்கு மாறாக, அடிமைச் சாசனம் எழுதியிருப்பது போல இழுத்துப் பிடித்திருக்கிறார்கள்! நாங்கள் கேட்பது பிரிவினை அல்ல, விடுதலை என்று.

பிறகு ஒரு மணி நேரம் நானும் அவரும் திராவிடம் பிரிந்தால் வாழும், அதற்கான வசதிகள் வாய்ப்புகள் இருக்கின்ற தென்பதை கூறினேன்,

அவருக்கு சொன்ன பதில் காமராஜருக்கும் பொருந்தும். காங்கிரஸ்காரனுக்கும் பொருந்தும் என்பதாலே தான் இந்தக் கூட்டத்திலேயும் சொல்லுகிறேன்,

பிரிந்தால் வாழ மாட்டீர்கள் என்று உதாரணத்திற்கு ஒரு கதையும் சொல்கிறார்கள்.

'சாகக் கிடந்த தகப்பன் தன்னுடைய நான்கு பிள்ளைகளையும் கூப்பிட்டான். நான்கு பிள்ளைகளும் ஒற்றுமையற்று இருந்தார்கள். தகப்பன் தன் பிள்ளைகளை விறகு குச்சிகளை எடுத்து வரச் சொன்னான்.

மூத்த மகனிடம் ஒரு குச்சியைக் கொடுத்தான். மூத்த மகன் உடைத்து விட்டான். இன்னொரு பையனிடம் கொடுத்தான்—குச்சி உடைந்தது! தகப்பன் நான்கு விறகு குச்சிகளையும் ஒன்றாக்கி உடைக்குமாறு மூத்த மகனிடம் கொடுத்தான்; ஒடிக்க முடியவில்லை மகனால்!

தனித் தனியாக இருந்த போது உடைக்க முடிந்தது. ஒன்றாக இருந்த போது ஒடித்தெறிய முடியவில்லை, ஆகவே ஒற்றுமையாக இருங்கள்! என்று பள்ளிக் கூடங்களிலே பிள்ளைகளுக்கு கதை சொல்லுவார்கள், ஆசிரியர்கள். எனக்குக் கூட சொல்லிக் கொடுத்தார்கள்.

அப்படி சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர் வீட்டில் அடுப்பில் நாலு ஐந்து விறகைத் தான் வைப்பாரே தவிர நாற்பது ஐம்பது என்று வைக்க மாட்டார்.

நான் சொல்லுகின்ற இந்த உதாரணம் உங்களை விட தாய்மார்களுக்குத் தான் அதிகம் புரியும்!

விறகு தொட்டியிலே இருந்து விறகை எடுத்து வரவேண்டுமானால் கயிறு ஒன்று வேண்டும், கயிற்றால் கட்டித் தான் வீட்டிற்கு எடுத்து வர வேண்டும். பிறகு ஒவ்வொன்றாக வைத்தால் தான் அடுப்பெரிக்க உதவும்,

கட்டி எடுத்து வருவது போலவே மொத்தமாக அடுப்பில் வைக்க முடியாது. அப்படி வைக்க வேண்டுமென்றால் அடுப்பின் வாய் பெரிதாக இருக்க வேண்டும்.

கட்டையை பிரித்துத் தான் அடுப்பில் வைக்க வேண்டும். இது, பாடத்தை சொல்லிய ஆசிரியர் வீட்டிலேயும் இப்படித் தான் நடக்கும்! பாடத்தை கேட்டானே அவன் வீட்டிலும் இப்படித் தான் எரிக்க வேண்டும். மேடையில் பேசுகிற காங்கிரஸ்காரன் வீட்டிலேயும் பிரித்து தான் அடுப்புக்குள் வைக்க வேண்டும்.

அதைப் போல், வெள்ளைக்காரனை ஓட்டுவதற்கு, கட்டையை தூக்கி வர கயிறு தேவைப்படுவது போல் பம்பாயிலே இருப்பவனும், பஞ்சாப்பில் இருப்பவனும், காஞ்சிபுரத்திலே இருப்பவனும், கான்பூரிலே இருப்பவனும் டில்லியிலே இருப்பவனும் ஒன்று பட வேண்டுமென்று கூறினார்கள்!

விறகை கட்டுவதற்கு கயிறு தேவைப்படுவது போல் வெள்ளைக்காரனை விரட்டுவதற்கு நமக்கு சக்தி வேண்டியிருந்தது. அதனாலே தான் பஞ்சாபிலே இருந்து லாலா லஜபதிராயையும் சேலத்திலே இருந்து சி. ராஜகோபாலாச்சாரியையும், ஈரோட்டிலே இருந்து பெரியார் ராமசாமியையும், வங்காளத்திலே இருந்து சபாஷ் சந்திரபோஸையும், பூனாவிலே இருந்து லோகமான்ய கங்காகர திலகரையும் காந்தியார் சதர் என்னும் கயிறால் கட்டினார்.

மொத்தமாக கட்டிய பிறகும் சில விறகுகள் வெளியே வருவது போல் சிலர் அந்தக் கட்டிலே இருந்தும் வெளியேறினார்கள்,

இப்போது கேட்பது உங்களை அல்ல, தாய்மார்களை கேட்கிறேன் விறகை பிரித்து வைக்கப் போகிறீர்களா, கட்டோடு வைக்கப் போகிறீர்களா என்று.

இதை விட்டு, நாங்கள் கேட்டும் விடுதலைக்காக நான்கு எருது ஒரு சிங்கத்தின் கதையையும். எட்டு கட்டைகள் உதாரணத்தையும் அரசியல்கருத்திலே புகுத்தி பேசுவதிலே பொருள் இல்லை,

(17-ம் பக்கம் பார்க்க)

நாங்கள் வழித்துப் போட்டோம்! நீங்கள் அதை ஏந்திக் கொண்டீர்கள்!

யார் வெள்ளைக்கார தாசர்கள் !

அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்?

(அண்ணா பேச்சு)

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

விறகை கட்டுகின்ற போது, கட்டுகின்ற கயிறு வலிவு உள்ளது தானா என்று பார்த்து கட்ட வேண்டும் வாழை நாரில் கட்டினால் நிற்குமா என்று பார்க்க வேண்டும், நைந்து போன கயிறினால் கட்டில் நிற்காது! எங்கள் பக்கததிலே பாளைக்கயிறு என்று சொல்லுவார்கள்.

அந்தக் கயிறினால் ஒன்றுக்கு இரண்டு கட்டுப் போட்டு இழுத்துக் கட்டினால் நிற்கும். இதை விட்டு கதரைப் போட்டு இழுத்துக் கட்டினால் எப்படி நிற்கும்?

வடக்கு தெற்கு என்று பேசுகிறார்கள் என்று நம்மீது குறை கூறுகிறார்கள். நமக்கும் அவர்களுக்கும் கொஞ்சங் கூட ஒட்டு உறவு இல்லை! பற்றுப் பாசம் இல்லை.

இங்கே கூடி யிருக்கும் கூட்டத்தில் நாயுடு யார், நாயக்கர் யார் என்று தோற்றத்தில் கண்டு பிடிக்க முடியாது, கேட்டால் தான் தெரிந்து கொள்ள முடியும்.

இங்கே ஒரு நீக்ரோக் காரன் இருந்தால், சீனாக்காரன் ஒருவன் இருந்தால், மார்வாடி இருந்தால் ஜப்பான்காரன் ஒருவன் இருந்தால் கண்டு பிடித்து விட முடியும்.

வடக்கு தெற்கு பேதத்தை நாங்கள் உண்டாக்கவில்லை. பரம்பரை பரம்பரையாகவே நம் நாட்டில் இருந்து வருகிறது. ஆகையால் தான் சொன்னேன், விறகை நல்ல கயிறால் கட்ட வேண்டுமென்று, கட்டக் கட்ட அறுபடுமானால் கட்டு நிலைக்காது. அதைப்போல் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவுதான் ஒற்றுமையைப் பற்றி பேசினாலும் கயிறு அறுபடுவது போல், அறுபட்டு விடுகிறது, நிலைக்கவில்லை!

தண்ணீரில் எண்ணெயை கலந்தால் வித்தியாசம் தெரியாது ஒன்று போல் இருக்கும். பெட்ரோலில் தண்ணீரைக் கலந்தால் பார்வையிலே வித்தியாசம் இருக்காது!

காருக்கு ஊற்றிய பிறகு பயன் படாது என்பது தெரியும்! கலக்கல் என்பது சட்டப்படி குற்றம்

வடக்கு தெற்கு பேதம் மொழியிலே இருக்கிறது. வடநாட்டுக்காரர்களுக்கும் நம்மவருக்கும் நடை உடை பாவனையிலே வித்தியாசமிருக்கிறது. வரலாறிலே வித்தியாசமிருக்கிறது, பண்பிலே வித்தியாசமிருக்கிறது! ஆகவேதான் நாம் அவர்களிடமிருந்து பிரிந்து வாழவேண்டுமென்று சொல்லுகிறோம்.

நாமும் அவர்களும் ஒன்றுசேர முடியாது!

வண்டியில் ஒரு பக்கம் குதிரையையும், இன்னொரு பக்கம் மாட்டையும் கட்டினால் ஓடுமா— ஓடாது!

ஒரு பக்கம் சாதாரண குதிரையும் இன்னொரு பக்கம் கிண்டி குதிரையும் கட்டிப் பாருங்கள் ஓடுமா—ஓடாது!

இந்தியா என்னும் முகாமுக்குள் நம்மை இணைக்கப் பார்க்கிறார்கள். இந்திய அரசிற்குள் ஒன்றுக்கொன்று இணைப்பது பொருந்தக் கூடியதாக இருக்காது!

இங்குவண்டியிலே பட்டாணி வேர்க்கடலை விற்பனை செய்வதைப் பார்க்கிறேன். விற்பனை செய்பவன் ஒரே தட்டில் பட்டாணியை ஒரு பக்கமாகவும், வேர்க்கடலையை ஒரு ப்க்கமாகவும் வைத்திருக்கிறான். வேர்க்கடலையையும் பட்டாணியையும் கலந்து சாப்பிட விரும்பினால் வாங்கிய பிறகு கலந்து கொள்ளலாம்! அதைப் போல் காங்கிரஸ்காரர்கள் இன்னும் சேர்ந்தே இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள்,

நான் வடநாட்டு பிடியிலே இருந்து தென்நாடு தனி நாடாக வேண்டுமென்று கூறுகிறேன். பிரிந்து விட்ட பின்னால் வேண்டுமானால் கொஞ்சம் கலந்து பயன்படுத்திக் கொள்ளலாம். இதை விட்டு கலப்பதால் லாபமில்லை நஷ்டம் தான்!

சில காங்கிரஸ்காரர்கள் கூறுகிறார்கள். 'இவர்கள் வெள்ளைக்காரனுக்கு அடிமையாக இருந்தவர்கள். இந்த புத்தி தானே இருக்கும்' என்று.

அவர்கள் சொல்லுவதை ஒத்துக் கொள்வோம். வெள்ளைக்காரனுக்கு அடிமையாகத் தாசர்களாக இருந்தவர்களுக்கே இந்த புத்தி என்றால் வெள்ளைக்காரனை ஓட்டிய இவர்களுக்கு ஏன் இந்த புத்தி வரவில்லை?

அன்றுவெள்ளைக்காரர்களுக்கு தாசர்களாக இருந்தவர்கள், வெள்ளைக்காரனை ஓட்டிய காங்கிரசில் இப்போது இருக்கிறார்கள்.

ராஜா சர். முத்தையா செட்டியார் இன்று காங்கிரசில் எம், எல். ஏவாக இருக்கிறார்,

அன்று ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்த சாமியப்பாமுதலியாரின் மகன் ராமலிங்கம் இன்று காங்கிரஸ் எம், எல்.ஏ!

ஜஸ்டிஸ் கட்சி மந்திரி குமாரசாமி ரெட்டியாருடைய மகன் இன்று காங்கிரஸ் .எம். எல். ஏ,

வெள்ளைக்காரனுக்கு அடிமைகள், தாசர்கள் என்று தாக்கிப் பேசியவர்கள் தான் இவர்களையெல்லாம் சேர்த்துக் கொண்டார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் தூய்மையானவர்கள், புடம் போட்ட தங்கம்.

அவர்களிடத்திலே இருப்பவர்கள் இங்கிருந்து வழித்தெறியப் பட்டவர்கள், இங்கே விலைபோகாதவர்கள்! இங்கேவழித்துகீழே போடப் பட்டவர்கள்!

ராஜா சர். முத்தையா செட்டியாரா—போ வெளியே! நீ இருந்தால் கழகம் உருப்படாது என்று வழித்துப் போட்டோம்.

வழித்துப் போட்டதை கையிலே ஏந்திக்கொண்டு காங்கிரஸ் மகிழ்கிறது.

சட்டமன்றத்தில் முத்தையா செட்டியார்காங்கிரசையேதிட்டி விட்டு நான் சந்தோஷப் படுகிறேனா இல்லையா என்று பார்த்து, அண்ணாத்துரை இவர்கள் என்னை வெள்ளைக்காரன் அடிமை. என்று கூறினார்கள். இவர்களோடு சேர்ந்துக் கொண்டு இவர்களையே திட்டுகிறேன் பார் என்று சொல்வது போவு இருக்கும் அவரது பார்வை!

அந்த நாளில் காங்கிரசில்இருந்தவர்கள் எல்லாம் இன்று நம்மிடத்தில் இருக்கிறார்கள்,

நம்மிடத்தில் இருக்கும் நண்பர் என்.வி. நடராசன் ஒரு சமயம் நான்தேர்தலில்நின்றபோது நான் தோற்க வேண்டுமென்பதற்காக தலை தெறிக்க ஒடி ஆடி காங்கிரசுக்காக வேலை செய்தவர்!

அண்ணாத்துரை நெஞ்சிலே இருக்கும் மஞ்சா சோறு வந்து விடும் என்று மோசமாக பேசினார்!

நெஞ்சிலே இருக்கும் மஞ்சா சோறு வந்து விடும் என்று பேசுவது, நெஞ்சில் ஒரு குத்து விட்டால் மயக்கம் வரும். வாந்தி வரும்போது சாப்பிட்ட சாப்பாடு மஞ்சள் மஞ்சளாக வெளியே வரும்! எங்கோ பேச வேண்டிய வார்த்தையை பேசினார். அவர்தான் இன்று, நம் கழகத்தில் துணைப் பொதுச் செயலாளர்! இப்படி ஆயிரமாயிரம் பேரை உதாரணத்திற்கு காட்ட முடியும்!

காங்கிரசில் இப்போது ஏழைகள் இல்லை. இங்கே இருந்த அழுக்கு அங்கே போய்விட்டது!

ஜலிக்கிறபோது பார்த்தால் தெரியும், தேவையில்லாதது மேலே தங்கும். மிச்சம் கீழே விழும்!

ரவையை ஜலிக்கிற போது ரவைகீழேவிழும்,எலிப்புழுக்கை இருந்தால கீழே விழாது! சல்லடையிலேயே தங்கி விடும். அதை விட்டு புழுக்கையை எடுத்து கையிலே வைத்துக் கொண்டு ரவையை விட பெரிதாக இருக்கிறதே என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். பேசிக் கொள்பவர்கள் பேசிக் கோள்ளட்டும், நமக்குபுழுக்கைதேவையில்லை!

இன்று அமைச்சராக இருக்கும் மாணிக்கவேலர், அன்று சுயேச்சையாக இருந்து, திராவிட நாட்டு பிரிவினைக்கு ஒப்புக் கொள்கிறேன் என்று கையெழுத்துப் போட்டு நமது ஆதரவு பெற்றவர்! இன்று காங்கிரஸ் மந்திரி!

நான் பார்த்தால், எங்கே கேட்டு விடுவோனோ என்று அவர் சங்கடப்படுகிறார்! சந்தர்ப்பம் வரும்வரை காத்திருந்து கேட்பேன் அவர் இல்லை என்று மறுத்தால்கையெழுத்துப் போட்

(18-ம் பக்கம் பார்க்க)



நெடும்பலம்சாமியப்பாவை அறிவாயா?

அவர் மகன் எங்கே இருக்கிறார்?

ராஜாசர் அண்ணாமலை செட்டியை தெரிவாயா?

அவர் மகன் முத்தையா எங்கே?

உங்கள் கட்சிக்கு பெயர் காங்கிரஸா, ஜஸ்டிஸ் கட்சியா?

(அண்ணா பேச்சு)

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கொடுத்தபத்திரம் என்னிடத்திலே இருக்கிறது, போட்டோ எடுத்து மக்களிடத்திலே காட்ட முடியும்!

இப்போது காங்கிரசிலே இருப்பவர்கள் சபர்மதிஆஸ்ரமத்திலே இருந்தவர்கள் எத்தனை பேர்? தண்டியாத்திரை செய்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? கைராட்டை சுற்றியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

காமராஜரை சொல்லுங்கள் ஏற்றுக் கொள்கிறேன், கக்கனை சொல்லுங்கள் ஏற்றுக் கொள்கிறேன். லூர்தம்மாளைச் சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

ஹாஜா ஷெரீப்பை எப்படி காங்கிரஸ்காரர் என்று ஏற்றுக் கொள்ள முடியும்? சி.ஆர்.ராமசாமியைஎப்படி ஏற்றுக்கொள்ள முடியும், எப்போது அவர் ஜெயிலுக்குப் போனார்?

முத்துச்சாமி ஜெயிலுக்குப் போனவரா?

சட்டசபைஅங்கத்தினர்களைப் பற்றி புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அதை படித்துக் காட்ட விரும்புகிறேன், என்றாலும் உங்களுக்குபொறுமைஇருக்காது என்பதற்காக படிக்கவில்லை.

எம், எல். ஏ.வாக இருக்கும் ஒரு அம்மையாரைப் பற்றி சொல்கிறேன். திருநெல்வேலி தொகுதியிலே இருந்து வந்தவர் அந்த அம்மையார். தன்னைப் பற்றி அறிவித்திருக்கிம் குறிப்பில் நிரம்பவும் தனக்கு சங்கீதம் தெரியுமென்றும், காங்கிரசில் 150, 200 கிளைக் கழகங்கள் ஆரம்பித்தேன் என்றும் வெளியிட்டிருக்கிறார்.

போராட்டத்தின் போது தடியடிப்பட்டவர்கள், போலீஸ் துப்பாக்கிக் குண்டுகளுக்கு ஆளாகியவர்கள், தியாக வடுக்களை தாங்கிக் கொண்டவர்கள் தொகை தீர்ந்து விட்டது, இப்போது அவர்களெல்லாம் நம் பக்கம்!

இங்கே இருந்த அழுக்கு அங்கே போய் விட்டது! காங்கிரசிலே இருந்த நல்லவர்கள் இங்கே வந்து விட்டார்கள்!

சுயராஜ்யம் கொடுப்பதற்கு முன்னாலே வெள்ளைக்காரர்கள் என்னென்ன தொழிலை நடத்தினார்களோ, அதே தொழில் இப்போதும் நடக்கிறது!

சுயராஜ்யம் கொடுப்பதற்கு முன்னால் போட்ட முதல் 100 கோடி என்றால், பன்னிரெண்டு வருடம் கழித்துப் பார்த்தால் இப்போது நானூறு கோடி ஐந்நூறு கோடி என்று உள்ளது.

அன்று கவர்னராகஇருந்தவன் —இப்போது கம்பெனியின் டைரக்டராக இருக்கிறான்.

அன்று கலெக்டராக இருந்தவன் இன்று ஏஜெண்டாகஇருக்கிறான்! வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த அதிகாரிகளும் வியாபாரிகளும் எங்கே போய் விட்டார்கள்.

கொடைக்கானலிலே உள்ள தேயிலை தோட்டத்திற்கும், காபி தோட்டத்திற்கும் சொந்தக்காரன் வெள்ளைக்காரன்

பக்கத்திலே இருக்கின்ற பி. என். சி. மில்லை நடத்துகிறவன் வெள்ளைக்காரன்! எங்கே வெள்ளைக்காரன் போய் விட்டான்,

முன்பு ஊர்மக்கள் ஏதாவது திட்டினால் அவன் தலையில் விடியும்,

இன்று பட்டா இவர்கள் கையில், அனுபவ பாத்தியத்தை அமெரிக்காக் காரனிடத்திலே இருக்கிறது!

வெள்ளைக்காரன் அனுபவித்ததை இன்று அமெரிக்காகாரன் அனுபவிக்கிறான். இதை விட்டு எங்களை வெள்ளையர்களுக்கு தாசர்களாகஇருந்தவர்கள்என்று சொல்வதிலே அர்த்தமில்லை!

இன்னொன்றும் கூறுகிறார்கள் 'திராவிட நாடு பிரிந்தால் எல்லாமே கெட்டு விடும்' என்று,

திராவிடநாடுபிரிந்தால் என்ன கெட்டு விடும்? படி அரிசி என்ன பதினோரு ரூபாய் விற்குமா? இரண்டு ரூபாய்க்கு கிடைக்கும் வேட்டியின் விலை அறுபதுரூபாயாகுமா? பத்து ரூபாய்க்கு கிடைக்கும் புடவை 160 ரூபாயாகுமா?

இப்படி ஏதாவது கணக்கு கொடுத்தார்களா?

வெள்ளைக்காரனை கொள்ளைக்காரன் என்று ஏசிப் பேசிய போது, வெள்ளைககாரன் காலத்தில் ரூபாய்க்குமூன்றுபடி அரிசி கிடைத்தது. கடைசி காலத்தில் இரண்டு படி போட்டான்.

வெள்ளைக்காரனை ஓட்டிய பிறகு, யுத்தம் இல்லை—இப்போது ஒரு படிஅரிசி ஒருரூபாய் ஒரு அணா விற்கிறது!

அதிகவிலை கொடுத்து வாங்கிய அரிசி உலையிலே போட்டால், சமையல் செய்யும் புண்ணியவதிக்கு திறமை இருந்தால் சோறாகும், ஏமாந்தால் கஞ்சியாகும்!

பன்னிரெண்டு வருடத்தில் இந்தியாவில் இவர்கள் பஞ்சத்தை ஓட்டி விட்டது போலவும். ஊர்சுபிட்சமாகஇருப்பது போலவும், ஊரிலே உள்ள ஒவ்வொருவரும் சுகமாக இருப்பது போலவும், நாங்கள் அதை கெடுக்க வந்தது போலவும் காங்கிரஸ்காரர்கள் திராவிடநாடு பிரிந்தால் என்ன பயன? என்றுகேட்கிறார்கள்! நாம் வடநாட்டவரோடு இணைந்திருப்பதில் லாபமில்லை. நஷ்டம்தான்என்பதைஉணர்ந்துதான் திராவிடநாடுபிரியவேண்டுமென்கிறோம். திராவிடநாடு பிரிந்தால் வாழ்வதற்கு வழி இருககிறது என்கிறோம்.

இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த தோழர்கள் இந்த இடம் வசதியானது என்பதைதெரிந்து முடிவு செய்து தான் இங்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!

அதைப் போல் நாடு பிரிந்தால் நமக்கு நல்வாழ்வு கிடைக்கும் என்று தெரிந்த பின்பு தான் நாடு பிரியவேண்டுமென்கிறோம்,

காங்கிரஸ்காரர்கள் பிரிந்தால் கெடும் என்கிறார்களே தவிர இன்னென்ன வசதிகள் இருந்தால் தான் தனி நாடாக இருப்பதற்கு வசதி உண்டு என்று சொல்லவில்லை!

ஆறு வயது பையன் பார்க் பேர் கண்காட்சிக்கு போகப் போகிறேன் என்று தாயிடம் கேட்டால்—

'பார்க் பேரில் கும்பல் அதிகமாக இருக்கும், நாளைபோகலாம் நானும் வருகிறேன்' என்பாள்.

பதினெட்டு இருபது வயது வாலிபன் பார்க்பேர் கண் காட்சிக்குப் போகிறேன் என்று தாயிடம் கேட்டால் இரு இரு துணைக்கு ஆள் அனுப்புகிறேன் என்றா சொல்வாள்?

எந்தத் தாயாவது அப்படிச் சொன்னால், பையன் எதற்கோ போகிறான், என்று கருதி துணைக்கு ஆள் அனுப்புவாள்?

தனிநாடு பிரிந்தால் வாழலாம் என்கிறோம்? மக்கள் இதற்கு மனப் பக்குவம் அடைந்து விட்டார்களா என்று கேட்கக் கூடும்.

அவர்களுக்கு சொல்லுவேன். தமிழ் நாட்டு மக்கள் தொகை மூன்று கோடி!

ஒரு கோடி ஜனத்தொகையுள்ள நாடெல்லாம் இன்று விடுதலை பெற்று ஐ நா.விலே அங்கம் பெற்றிருக்கின்றன, இதற்கு உதாரணம் அண்டையிலே இருக்கும் சிலோன் நாடு!

கோடிக்கணக்கில் அல்ல லட்சக்கணக்கில் உள்ள பூடான், சிக்கின் போன்ற நாடுகள் விடுதலை பெற்றிருக்கின்றன. அதைவிட மூன்று மடங்கு அதிகமாக உள்ள நம் நாடு தனி நாடாக முடியாதா?

நாட்டிலே உள்ளவர்களுக்கு வலிமை இல்லையா? நம் நாட்டவர்களின் வீரத்திலே சந்தேகமிருந்தால் பண்டைய வரலாற்றைப் பாருங்கள் எந்தக் காலத்திலும் தமிழ் மன்னர்கள் அடிமையாக வாழ்ந்ததில்லை.

வெள்ளைக்காரன வியாபாரத்திற்கு இடம் கேட்டுத்தான் நாட்டைப் பிடித்தானே தவிர யுத்தகளத்தில் தோற்கடித்து நாட்டை பிடிக்கவில்லை.

யுத்தகளத்தில் தோற்று புறமுதுகு காட்டி ஓடியவர்கள் வடக்கே இருக்கலாமே தவிர தமிழர்கள் ஒருபோதும் யுத்தகளத்தில் தோற்று ஓடியதில்லை, தமிழர்கள் பரம்பரை, வீரபரம்பரை.

மூன்று கோடி மக்கள்தொகை உள்ள நம் நாடு தனி நாடானால் ஏன் தனித்து வாழ முடியாது? நம்மால் வாழ முடியும்.

திராவிட நாடு பிரிந்தால் சோறு கிடைக்குமா என்று காமராஜர் கேட்கிறார். நல்ல அரசியல்வாதியென்றால், இன்னின்ன வசதிகள் இருந்தால் திராவிட நாடு பிரிய முடியும் என்று சொல்ல வேண்டும். இதைவிட்டு அண்ணாத்துரை உயரம் இவ்வளவு, சம்பத் மார்பு இவ்வளவு அகலம் என்று பேசுவதிலே அர்த்தமில்லை!

நான் இரண்டு பக்கத்திற்கு வக்கீலாக இருந்து அவர்கள் கேட்கும் கேள்விகளை கேட்டு, பதிலையும் நானே சொல்ல வேண்டியிருக்கிறது!

தமிழகத்தில் உணவு உற்பத்தி அதிகமாகவில்லை! தமிழகத்தில் நஞ்சை, புஞ்சை ஏராளம்! காடு கரம்புகளை திருத்தி கழனியாக்காமல், கிராமத்திலே உள்ளவர்கள் பி. அன். சி, மில்லிலோ, வேறு தொழிற்சாலைகளிலோ வேலை செய்ய வந்து விடுகிறார்கள்,

கிராமத்திலே இருந்தால் லைட் ஹவுஸை பார்க்க முடியாது, பீச்சை பார்க்க முடியாது என்று கருதி இங்கே வருகிறார்கள். இங்கே வந்து பிழைக்க மார்க்க

(20-ம் பக்கம் பார்க்க)

உச்சவரம்பு வருமா, வராதா?

தேர்தல் பேச்சா? அது ஓட்டுக்கு ஏணியா?

குதிரை களவு போன பின்பு லாயம் பூட்டப்படுவதா?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கண் கட்டு வித்தைக்காரர்களைப்பற்றி புரிந்துகொண்ட பின்பும் அவர்களை ஆதரிப்பது தற்கொலைக் கொப்பாகும்!

ஒரு பத்துப் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குமேல் அவர்களை ஆட்சியில் அமர்த்திப் பார்த்தீர்கள்! நீங்கள் கண்ட சுகம்தான் என்ன? ஒரு ஐந்தாண்டு காலத்திற்காவது திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிப்பீடத்தில் அமர்த்திப் பாருங்கள்! பலன் கிடைக்கவில்லை என்றால், சுகம் கிடைக்கவில்லை என்றால் அவர்களையும் வீட்டுக்கு அனுப்புங்கள்! ஒரு ஆட்சியை ஆக்கவும், அழிக்கவும் உங்களுக்கு வல்லமை இருக்கிறது! பிறகேன் அச்சப்பட வேண்டும்!

“நிலச்சீர்திருத்தம் செய்து, உச்ச வரம்பு கட்டப்போகும் சர்க்காரையா ஒழிப்பது” என்று பலர் கூறலாம்!

நிலச்சீர்திருத்தம் தேவைதான்! உச்ச வரம்பும் அவசியம்தான்! ஆனால் காங்கிரஸ்காரர்கள் செய்யப்போகும் நிலச்சீர்திருத்தத்தினாலோ, உச்சவரம்பாலோ ஏழைகளுக்கு, சிறு நிலச்சுவான்தாரர்களுக்கு ஏதும் பயனில்லை! நிலச் சீர்திருத்தம் செய்தால் மட்டும் போதாது, உச்ச வரம்பு கட்டினால் மட்டும் பயன் கிடைக்காது! விவசாயத் துறை பலனளிக்கும் துறையாகவும் மாற வேண்டும்!

உச்சவரம்பு ஏற்பட்டு, ஆளுக்கொரு ஏக்கரா நிலம் கிடைத்துவிட்டதாகவே வைத்துக் கொள்ளுங்கள்! அந்த ஒரு ஏக்கரா, அல்லது இரண்டு ஏக்கரா, அல்லது பதினைந்து ஏக்கரா நிலம் கிடைத்தாலும் அதைக்கொண்டு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியுமா?

மிட்டாய்க் கடை வைத்திருக்கிற லாலாவுக்கு வருகிற வருமானம் — ஏன், சென்னையில் ரிக்ஷா இழுத்துச் செல்லும் ஒரு தோழனுக்கு கிடைக்கிற வருமானம் ஒரு நிலச் சொந்தக்காரனுக்கு கிடைக்காது, நிச்சயமாகக் கிடைக்காது!

திராவிட நாடு கிடைத்து, அந்த திராவிட நாட்டில் மலரப் போகும் சமதர்மத்தில்தான் உண்மையான நிலச்சீர்திருத்தம், ஒழுங்கான நிலச்சீர்திருத்தம், பயனுள்ள நிலச் சீர்திருத்தம் ஏற்படும்!

எனவே திராவிடத்தின் விடுதலைக்காக அனைவரும் பாடுபட வேண்டும்! அந்த உறுதியை இந்தப் பொங்கல் திருநாளில் எடுக்க வேண்டும்!

1962-ல் வர இருக்கின்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியை நிச்சயமாக வீட்டுக்கனுப்ப வேண்டும்! இந்தப் பணியை செய்ய இந்தப் பொங்கல் திரு நாளில் சபதம் செய்து கொள்ளுங்கள்!

காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவது சுலபமான காரியமல்ல! அது பெரும் செல்வாக்குப் படைத்த கட்சி — அப்படியென்றால் செல்வத்திலேயும் புரளும் கட்சி என்று பொருள்! அதை எதிர்த்தொழிக்க வேண்டுமானால் நமக்கும் பண பலம் தேவையாகும்! பண பலம் தேவை என்றால், ஓட்டுகளை விலைக்கு வாங்க அல்ல—தேர்தல் செலவுக்காக!

“ஆமாம், டாடாவும், பிர்லாவும், டால்மியாவும், கோயங்காவும் இருக்கும்போது—அவர்களை வெல்லும் சக்தி நமக்கேது” என்று கேட்கலாம்!

நமது அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை பொதுக் கூட்டமொன்றில் நல்ல முறை ஒன்றை, எளிய முறை ஒன்றை நமக்கெல்லாம் எடுததுச் சொல்லி இருக்கிறார்! “ஆளுக்கொரு உண்டி வையுங்கள் — தினம், தினம் கையில் கிடைத்ததை அதிலே போடுங்கள்” என்று கூறி இருக்கிறார்! இதைச் செய்தால் டாடாவும், டால்மியாவும். கோயங்காவும் நம்மிடமல்லவா பிச்சைக் கேட்க வேண்டும்! இதைக்கூடவா நம்மால் செய்ய முடியவில்லை!

நமக்குத் தெரிந்து, உலகத்தில் எத்தனையோ நாடுகள் விடுதலை பெற்றிருக்கின்றன! அந்த விடுதலைக்கு அந்தந்த நாட்டு மக்கள் எத்தனை தியாகங்களை புரிந்திருக்கிறார்கள் தெரியுமா? அவர்கள் செய்த தியாகத்தில் நூறில் ஒரு பங்காவது நாம் செய்ய வேண்டாமா?

அறிஞர் அண்ணா அவர்கள் உண்டி வைத்து பணம் சேர்க்குமாறு அன்பு கட்டளையிட்டு ஏறத்தாழ—இல்லை இல்லை—சரியாக முப்பத்தி நான்கு நாட்கள் ஆகின்றன! இதுவரை எத்தனை பேர் உண்டி வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு தொகை சேர்த்திருக்கிறீர்கள்! கணக்கிட்டுச் சொல்லுங்கள்! மாதம் ஒரு முறையாவது கணக்கிட்டுச் சொல்லுங்கள்!

இந்த முப்பத்தி நான்கு நாட்களில் தினம் தினம் ஒரு ஐந்து காசுகள் உண்டியில் போட்டிருந்தால் கூட ஒரு நூற்றி எழுபது காசுகள் சேர்த்திருக்கலாம்!

சென்ற பொதுத் தேர்தலில் நமக்கு வாக்களித்தவர்கள் அத்தனை பேரும் உண்டி வைத்திருந்தால் இன்றோடு சேர்ந்திருக்கும் தொகை ரூ. 17,77,000 ஆகும்!

ஒரு பத்து இலட்சம் பேராவது உண்டி வைத்திருந்தால் இதுவரையில் சேர்ந்திருக்கும் தொகை ரூ. 10,70,000 ஆகும்! அல்லது, கழகத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வரும் கழகத் தோழர்களில் ஒரு இரண்டு இலட்சம் பேராவது உண்டி வைத்திருந்தால், தினம், தினம் ஐந்து காசுகள் வீதமாவது போட்டிருந்தால் இதுவரையில் சேர்ந்திருக்கும் தொகை ரூ. 2,14000 ஆகும்.

எத்தனை பேர் உண்டி வைத்திருக்கிறீர்கள்? எவ்வளவு தொகை சேர்த்திருக்கிறீர்கள்?

அறிஞர் அண்ணா அவர்கள் தினம் தினம் கூட்டங்களில் பேசுவது பெருமைக்காக அல்ல—நாவன்மையை எடுத்துக் காட்டுவதற்காகவும் அல்ல! நாடு விடுதலை பெறுவதற்கு, நாட்டு மக்கள் உணர்ச்சி பெறுவதற்கு!

அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது இலட்சம் இலட்சமாக வந்து கூடுகிறீர்கள், உணர்ச்சியடைகிறீர்கள்!

முதலமைச்சர் காமராஜரோ. அடுக்கு மொழிக்காக, அண்ணாவின் அலங்கார வார்த்தைகளுக்காக, அழகுப் பேச்சுக்காக நாம் கூடுவதாகக் கூறுகிறார்! “கூட்டம் அங்கே, ஓட்டு இங்கே” என்று தைரியமாகவும் சொல்லி வருகிறார்! அது உண்மை அல்ல என்பதை உண்டி வைத்து, பணம் சேர்த்து — “முதலமைச்சரே! காமராஜரே! எங்கள் கழகத் தோழர்களில் இரண்டு இலட்சம் பேர் உண்டி வைத்து—உண்டி வைத்து சரியாக முப்பத்தி நான்கு நாட்கள்தான் ஆகின்றன—அதற்குள் நாங்கள் சேர்த்தத் தொகை இரண்டு இலட்சத்தி பதினான்காயிரமாகும்!” என்று புள்ளி விவரம் காட்டி—“எங்களையா அடுக்கு மொழிக்காரர்கள் என்று கூறுகிறீர்கள், எங்களையா கையாலாகாதவர்கள் என்று சொல்லுகிறீர்கள்! பார்! பார்! இதோ இரண்டு லட்சம்! கேள்! கேள்! உந்தன் கதையை” என்று கூறிட வேண்டும்! இதைச் செய்தால் அடுத்தத் தேர்தலில் மாட்டுச் சின்னத்தையே காண முடியாது!

“எல்லை எது” என்று கேட்கும் மந்திரிகள்கூட “இதுதான் எல்லை” என்பார்கள்! “திராவிட நாடு பிரிந்தால் வாழுமா” என்று பேசிடும் அமைச்சர்கள்கூட “ஏன் வாழாது, உலகத்தில் எத்தனையோ நாடுகள் வாழ்கின்றனவே” என்று கூறுவார்கள்! நாம்— **“திராவிட நாடு”** என்று முழங்கினால் அமைச்சர்கள் அத்தனை பேரும் **“திராவிடருக்கே”** என்று எதிரொலிப்பார்கள்! இது நிச்சயம், இது நிச்சயம்! எனவே, உடனே செயலில் இறங்குங்கள், திராவிடத்தைப் பெற பாடுபடுங்கள்!

‘மாலைமணி’-அண்ணா சொன்ன அன்றே உண்டி வைத்து விட்டது! இதுவரை ஒரு ரூபாய் எழுபது காசும் சேர்த்து விட்டது!

இதுவரையில் யாராவது உண்டி வைக்காமல் இருந்தால் இந்தப் பொங்கல் திருநாளிலாவது உண்டி வைத்து, கையில் கிடைத்த காசுகளை தினம், தினம் போட்டு வாருங்கள்! இது ஒன்றே காங்கிரசை வீழ்த்த வழியாகும்!

பொங்கல் வாழ்த்து

★

உலகெல்லாம் வாழ வழி காட்டிய கன்னித் தமிழனின் பொன்னான புதுநாள் இந்நாளில், எங்கள் உள்ளன்பு நிறைந்த வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் எங்கள் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்புள்ள,

ப. சுப்ரமணியம்,

661/4, முதலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.

Registered as a Newspaper in CEYLON
Regd NoM. 7074 விலை 30 காசு **MALAIMANI** PhoneNo.83285
இலங்கையில் 35 சதம்

(அண்ணு பேச்சு)

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லாமல் ஒரு கவளம் சோற்றுக்கு திண்டாடுகிருர்கள்,

ரிக்ஷா இழுப்பவன் உழவன். அதிலே உட்காருபவனும் உழவன். சட்ட சபையிலே எம். எல். ஏ.வாக இருக்கும் சீனுவாச அய்யர் வக்கீல் தொழில் புரிந்தவர், உழுது அலுத்தவர், அவர் பேசுகிருர் உணவு உற்பத்தியாகவில்லை! என்று.

திராவிடம் பிரிந்தால் சோறு கிடைக்குமா என்று காமராசர் கேட்கிருர். சோறு நிச்சயம் இருக்கிறது,

சோறு மட்டுமல்ல, சேலத்திலே இரும்பு இருக்கிறது. காவேரி ஆற்று மணலில் பெட்ரோல் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள், ஜிப்சன் இருக்கிறது. அலுமினிய பாக்ஸைட் இருக்கிறது. தங்கம் இருக்கிறது மைசூரில்! மைசூர் கன்னடத்தை சேர்ந்தது என்று அவர்கள் கூறினுலும் நீலகிரி பகுதியிலே இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள், வேறு என்ன வேண்டும், விரலை மடக்குங்கள். வைரம் இல்லை என்று சொல்லக் கூடும். ஆப்ரிக்காவிலே தான் இருக்கிறது. வடக்கே ஏதோ ஒரு காட்டில் இருப்பதாக கூறுகிருர்கள், பூமியைத் தோண்டி ஆராய்ச்சி செய்வதற்கான அதிகாரம் டில்லியிடம் இருக்கிறது.

இங்கே, விவசாயி கிணறு வெட்ட குழி தோண்டலாம், காங்கிரஸ் கொடிக் கம்பம் நடுவதற்கு குழி தோண்டலாம். மற்றதற்கெல்லாம் டில்லியிலே தான் அதிகாரம் இருக்கிறது!

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள் என்ருல் அவர்களெல்லாம் பஞ்சைகளா, பராரிகளா?

தெருக்கூத்திலே ஆடுகின்றவர்கள் தலையிலே வைத்திருக்கும் முடியைப் பார்த்தால் அதில், விதவிதமான கற்களை பதித்திருப்பார்கள்!

மண்டபங்கள் அழிந்து மண்மேடாகியிருக்கிறது. தோண்டிப் பார்த்தால் கிடைக்காதா? பூமியைத் தோண்டிப் பார்க்கின்ற அதிகாரம் இங்கு இல்லை! பூமியைத் தோண்டிப் பார்க்கும் ஆராய்ச்சி அங்கே நடைபெறுகிறது.

முக்கிய நகரங்களில்
நமது விற்பனையாளர்கள்

கலா நியூஸ் ஏஜன்சி
185, கேவல்ரி ரோடு,
பெங்களூர்-1.

x x x

ஜமால் நியூஸ் ஏஜன்சி
19/48, எச். எம். பி. ஆர். தெரு,
கோட்டை, கோயம்புத்தூர்.

x x x

ஜி. அன்புமணி
2, பூலோகநாதர் கோவில் தெரு,
திருச்சி-8.

x x x

வி. மோகன்
736, கீழ அலங்கம்,
தஞ்சை.

x x x

என். இராமாச்சாரி
47, பங்களாத் தெரு,
சேலம் டவுன்-1.

x x x

நேரு நியூஸ் மார்ட்
சென்னை-4.

x x x

தமிழ்ப்பண்ணை
193, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பணாம்.

x x x

பி. சுப்பிரமணியம்
த. பெ. எண். 962,
முதல் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

இக்பால் புத்தக நிலையம்
58, பிரின்சப் தெரு,
சிங்கப்பூர்-7.

x x x

எஸ். என். பிச்சை
14, வடுகத் தட்டாரச் சந்து,
மதுரை.

x x x

கே. அனீபா
58, வண்ணுந்துறை ரோடு,
பொள்ளாச்சி.

x x x

திருமகள் அண் கோ,
207, தாராவி,
பம்பாய்-17.

x x x

ஏ. கே. சாமிகண்ணு
27, ஓ. பி. ரோடு,
விழுப்புரம்.

x x x

கே. கோதண்டபாணி
242, தூய்ப்ளேக்ஸ் வீதி,
பாண்டிச்சேரி.

X X X

வி. நடராசன்
83-சி. லாரன்ஸ் ரோடு,
கடலூர் N. T.

X X X

எம். மாணிக்கம்
திராவிடப் புத்தகப் பூங்கா,
திருப்பூர்.

x x x

பி. சுந்தரராசு
வடக்கு மேட்டு ராஜப்பட்டி,
திண்டுக்கல்.

நிதி அமைச்சர் சொன்ன பண்டாரம்-நாடாண்ட கதை!

நமது அறிஞர் அண்ணு அவர்கள், "மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்திற்கு ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும்" என்று கூறியதை வைத்துக் கொண்டு நமது நிதி அமைச்சர் பண்டாரம் கதை பேசி இருக்கிருர்!" "பண்டார பசங்களே! நாம் ஆயிரம் கோடி ரூபாய் கேட்டால் டில்லி எஜமானர்கள் தருவார்களா? ஒருக்காலும் தரமாட்டார்கள்" என்று மறைமுகமாகவோ அல்லது தன்னை யறியாமலேயோ ஒரு விளக்கத்தைத் தந்து விட்டார்! அவர் வாழ்க! நீடுழி வாழ்க!

அண்ணு கேட்ட ஆயிரம் கோடி ரூபாய் அதிகமாம்! இது அளவற்ற ஆசையாம்! பண்டாரம் கண்ட கனவாம்!

பல ஆயிரம் கோடிகளை அள்ளி அள்ளிக் கொட்டி ஆலைகளை அமைத்தார்கள், சாலைகளைப் போட்டார்கள், அணைகளைக் கட்டிஞர்கள்! தானதர்மம் செய்தார்கள்! வடக்கை வாழ வைத்தார்கள்! அது ஆசையல்லவாம்! அது பண்டாரங்கள் கண்ட கனவல்லவாம்! நாம் வாழ வேண்டுமென்ருல், நம் நாடு செழிக்க வேண்டும் என்று கூறினுல் அது அளவுக்கு மீறிய ஆசையாம்!

ஒரு அமைச்சர், அதுவும் மக்கள் ஓட்டுகளைப் பெற்று வந்த அமைச்சர் கதை சொல்லுகிருர் பாருங்கள்! எங்கேயோ இரண்டு பண்டாரங்கள் இருந்தார்களாம், வயிறு புடைக்க விருந்துண்டார்களாம், வயற்காட்டிலே படுத்துப் புரண்டு தூங்கி எழுந்தார்களாம்! ஒரு பண்டாரம் சுற்றி இருந்த பசும் சோலையைப் பார்த்து விட்டு இதில் ஒரு ஏக்கர் நிலம் இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும் என்ருனும்! கூட இருந்த பண்டாரம் அந்தப் பண்டாரத்தைத் தட்டி "நினைப்பில் கூட கஞ்சத்தனமா? கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் கிடைக்கட்டுமே" என்ருனும்! அண்ணுதுரையும் இது போல கேட்கிருராம்.

நமது நிதி அமைச்சருக்கு இதுவரையில் தான் கதை தெரியும்! அடுத்து நடைபெற்ற கதை நமது நிதி அமைச்சருக்கு தெரிய நியாயமில்லை.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு அந்த பண்டாரம் தேர்தலுக்கு நின்ருனும்! மந்திரியானுனும்! கண்ணுக்கு எட்டிய தூரம் மட்டுமல்ல மனசுக்கு எட்டிய தூரம் வரையில் அவனுக்கு அந்த நிலம் சொந்தமாயிற்ரும்! அதாவது நாடே அவனது அதிகாரத்திற்குள் அடங்கிக் கிடந்ததாம்! பிறகு ஒருநாள் அவனை கேலிசெய்த பண்டாரம், அமைச்சர் பண்டாரத்தைப்பார்த்தானும்! "நீங்கள் கண்ட கனவு நிறைவேறிவிட்டதே" என்ருனும்! "உழைத்தால் மனிதனுடைய கனவு நிறைவேறத் தான் செய்யும்" என்று பதில் சொன்னுனும்.

இது அவர் சொன்ன கதைக்கு பிற்பகுதி! இதையும் நிதி அமைச்சர் அறிந்து கொள்ளட்டும்!

இங்கு எப்போதாவது கஷ்டப்பட்டு தோண்டிப் பார்த்தால் பிள்ளையார் சிலை ஒன்று கிடைக்கும். உடனே 'கல்கி' பத்திரிகை முகப்பில் போட்டு, உள்ளே பிள்ளையாரைப் பற்றி இரண்டு பக்கம் மூன்று பக்கம் எழுதும். எல்லா பிள்ளையாருக்கும் தும்பிக்கை இப்படித்தான் இருக்கும். இந்தப் பிள்ளையாரின் தும்பிக்கை வா வா என்று அழைப்பதுபோல் இருக்கிறது. இதைப்போல் எங்கும் கண்டதில்லை என்று போற்றிப்புகழும்.

தோண்டிப் பார்க்கும் அதிகாரம் மட்டும் இருந்தால் எல்லா விதமான பொருள்களும் கிடைக்கும்!

தனி நாடானுல் வாழ்வதற்கு வசதியிருக்கிறது என்கிருேம் இங்கு தங்கம் இருக்கிறது! நிலக்கரி இருக்கிறது! ஜிப்சன் இருக்கிறது! மைக்கா இருக்கிறது, இப்படி எல்லாமே இருக்கிறது. ஆகவே தனி நாடாக வாழலாம் என்று கூறுகிருேம்.

இதற்குமேல் பேச வேண்டியத் தேவையில்லை! காங்கிரஸ்காரர்கள் நாம் சொன்ன காரண காரியங்களுக்கு அடுத்தக் கூட்டத்தில் பதில் சொல்லட்டும்!

இப்படிக் கூறுவதற்கு காரணம், மாடு தேவையான அளவு தீனி சாப்பிட்டுவிட்டு, மெள்ள மெள்ள அசை போட்டு ஜீரணிப்பதுபோல் இதுவரை சொன்ன கருத்துக்களை நீங்கள் கேட்டீர்கள். இங்கே கேட்டதை ஆர அமர சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

அடுத்த இதழ்

பொங்கல் விழாவை முன்னிட்டு அடுத்து வர இருக்கின்ற 17-1-60 தேதி இதழ் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. வழக்கம் போல் 24-1-60ம் தேதி இதழ் இரண்டு தினங்களுக்கு முன்னதாகவே வெளிவரும்.

—நிர்வாகி
'மாலைமணி'

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை